வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 30.05.2022 திங்கட்கிழமை | இதழ் : 175 | பக்கங்கள் : 16




# தேசிய சபையை அமைக்க பிரதமர் ரணில் அழைப்பு!



- பாராளுமன்றக் கட்டமைப்பை மாற்றுவோம்
- பாராளுமன்றுக்கு பதில்கூறும் ஜனாதிபதி முறை
- இளைஞர்கள் பிரதிநிதித்துவத்துக்கும் வாய்ப்பு
- போராட்டக்காரர்களையும் பங்கேற்க அழைப்பு

கொழும்பு, மே 30

**பாராளுமன்றத்தின் கட்டமைப்பை மாற்றி, தற்போதுள்ள பாராளுமன்ற முறை அல்லது வெஸ்ட்மினிஸ்டர் முறை மற்றும் அரசியலமைப்பு முறை ஆகியவற்றை இணைத்து புதிய அமைப்பை உருவாக்க வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பாராளுமன்றம் நாட்டை ஆள்வதில் பங்கேற்கலாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அத்துடன், சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் முக்கிய கட்சிகளின் தலைவர்கள் அடங்கிய தேசிய சபையையும் அமைப்பதற்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றினார். இதிலேயே இந்த அழைப்பை அவர் விடுத்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இன்று, நம் நாட்டில் உள்ள முக்கிய பிரச்னைகள் பொருளாதாரத் துறையில் மட்டுமல்ல. அரசியல் வட்டாரத்திலும் இரண்டு முக்கிய பிரச்னைகள் உள்ளன. 19ஆவது திருத்தச் சட்டத்தை மீள அறிமுகப்படுத்துவது இந்த விடயங்களில் ஒன்றாகும். இது தொடர்பில் கட்சித் தலைவர்கள் என்ற வகையில் தற்போது 21ஆவது திருத்தச் சட்டத்தை தயாரித்து வருகின்றோம்.

இரண்டாவது விடயம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி

15

# இருபது மாதங்களுக்குள் 14 சிறுவர்கள் கொலை!

கொழும்பு, மே 30

நாட்டில் கடந்த 20 மாதங்களுக்குள் 14ஆவது சிறுவர் (பாத்திமா ஆயிஷா) படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து அதிர்ச்சியடைந்துள்ளோம். இது விடயத்தில் தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு ஆணையம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிறுவர்கள் பாதுகாப்பு கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு

15

# புதன்கிழமை முதல் எரிவாயு விநியோகம்!

கொழும்பு, மே 30

நாளை மறுதினம் புதன்கிழமை முதல் எரிவாயு விநியோகம் ஆரம்பமாகும் என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இன்றைய தினம் 3,500 மெற்றிக் தொன் எரிவாயுவுடன் கப்பல் ஒன்று கொழும்பை வந்தடையவுள்ளது. இதையடுத்தே எரிவாயுவை புதன்கிழமைமுதல் விநியோகிக்க லிட்ரோ நிறுவனம் முடிவு செய்துள்ளது. (ஐ)

# ஆளுநரின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும்!

## சித்தார்த்தன் எம். பி.

யாழ்ப்பாணம், மே 30

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரம் மட்டுமல்ல மாகாண ஆளுநரின் அதிகாரங்களும் குறைக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் எம். பி. தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் தனது இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

21ஆவது திருத்தச் சட்டம் என்பது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்பு ஆகும். இது சார்ந்த விடயங்கள் உள்ளடக்கப்படாவிடின்

15



# மருத்துவ மாணவர் பேரணியை கலைத்தமையால் பதற்றம்!

கொழும்பு, மே 30

மருத்துவபீட மாணவர்களின் பேரணிமீது உலக வர்த்தக மையப் பகுதியில் வைத்து பொலிஸார் கலைக்க முயன்றதால் பதற்றம் ஏற்பட்டது.

15

# காணாமல் ஆக்கப்பட்ட மகனை தேடிய மற்றொரு தாயும் மரணம்!



வடமராட்சி, மே 30

காணாமல் ஆக்கப்பட்ட மகனைத் தேடி வந்த மற்றொரு தாயாரும் நேற்று அதிகாலை மாரடைப்பால் மரணமானார்.

யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் முன்னாள் தலைவியும், 2015 ஆம்

15

# அரசின் 21ஐ ஆதரிக்க மாட்டோம் ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு!



கொழும்பு, மே 30

அரசாங்கம் முன்வைக்கும் 21ஆவது திருத்தச் சட்டத்தை ஒருபோதும் ஆதரிக்கப் போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

இதேநேரம், தங்கள் கட்சி கொண்டுவரும் 21ஆவது திருத்தச் சட்டத்தை வெற்றியடைய வைக்கப் பாடுபடுவோம் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

நேற்று அவர் தனது அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

21ஆவது திருத்தச் சட்டம் என்ற பெய

15

## தமிழக நிவாரணம்:

# யாழ்ப்பாணத்துக்கு இன்று கிடைக்கும்!

யாழ்ப்பாணம், மே 30

தமிழக அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு கிடைக்கவுள்ளன.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசாங்கம் நிவாரண உதவியை அறிவித்தது. இதன் முதல் கட்ட உதவிப்

15

## சிறுப்பிட்டியில் விபத்து:

# இளைஞன் உயிரிழப்பு; மற்றொருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், மே 30

அதிவேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து பஸ் தரிப்பு நிலையத்துடன் மோதுண்டத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணி

15

## இப்படியும் நடக்கிறது...!

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றதும், முதலில் அவரது நியமனத்தை வரவேற்று செய்தி வெளியிட்டவர் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர். அதன் பின்னரே இந்தியாவும் அவரது நியமனத்தை வரவேற்றது.

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் மேற்கின் செல்லப்பிள்ளை என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை.

அதற்காக, இன்று இருக்கும் நெருக்கடியை அந்த ஒரு ரணில் பற்றிய அனுகூலம் காப்பாற்றிவிடப்போவதில்லை என்பதும் நமக்கு தெரிந்ததே.

ஆனால் இன்று, சர்வதேச நாயண நிதியம், உலக வங்கி போன்ற அமைப்புக்களிடம் உதவி பெற்று அல்லது கடன்களைப் பெற்று மாத்திரம் இந்த பொறியிலிருந்து நாம் வெளியே வந்துவிட முடியாது என்பதையும் சகல பொருளியல் நிபுணர்களும் கோடிட்டுக் காட்டிவருகின்றனர்.

நாட்டுக்கு பொருத்தமான பொருளாதார மேம்பாட்டுக்கான கொள்கை ஒன்றை வகுத்து, நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்ல நிலையான - ஸ்திரமான அரசு ஒன்று இன்றியமையாதது.

சரி பிழைக்கு அப்பால், இன்றைய ஆட்சியாளர்கள் மக்களின் ஆணையைப்பெற்றே ஆட்சிக்கு வந்தவர்கள். இன்று இந்த அரசை வீட்டுக்குப் போ என்று சொல்கின்றவர்கள் யார்? நாட்டின் மக்கள் தொகையில் எத்தனை வீதமானவர்கள் இன்று வீதியில் நின்று இந்த அரசை வீட்டுக்கு போகச்சொல்கின்றார்கள் என்பதெல்லாம் ஊகங்கள் மட்டும்தான்.

இது ஒரு ஜனநாயக நாடு. அதற்கென்று ஓர் அரசியலமைப்பு சட்டம் உண்டு.

இந்த நாட்டில் இதுவரை கொண்டுவரப்பட்ட எந்த ஓர் அரசியலமைப்பு சட்டமும் தமிழ் மக்களின் விருப்பத்தோடு நிறைவேற்றப்படவில்லை என்பதாலோ என்னவோ, இன்றைய அரசியல் நெருக்கடியிலும் தமிழ் மக்கள் பெரிதாக ஆர்வம் காட்டியதாக தெரியவில்லை.

ஆனால், இன்றைய பாராளுமன்றம் நாட்டு மக்களின் ஆதரவை இழந்து விட்டது என்பதும் இரகசியமானதல்ல. ராஜபக்ஷ அரசு மக்கள் செல்வாக்கை இழந்து விட்டது உண்மை என்றால், அவர்களின் பொதுஜனமுன்னணியையே பெரும்பான்மையாகக்கொண்ட பாராளுமன்றமும் நம்பிக்கையை இழந்துவிட்டதுதான். பொதுஜன முன்னணியிலிருந்து வெளியேவந்த பதினொரு கட்சிகளின் நாற்பதுக்கும் அதிகமான உறுப்பினர்களுக்கும் பொதுஜனமுன்னணி என்ற கட்சிக்கு விழுந்த வாக்குகளிலேயே அவர்களும் விருப்பு வாக்கு பெற்று வந்தார்களே தவிர, அது அவர்களுக்கான தனிப்பட்ட வாக்குகள் என்பது நிச்சயமானதல்ல.

அந்த நிலையில், கோட்டா வீட்டுக்குப் போ என்ற கோஷம் உண்மையில் புத்திஜீவித்தனமாக வைக்கப்படவேண்டும் என்றால், மக்களின் செல்வாக்கைப் பெற்ற பாராளுமன்றம் ஒன்று முதலில் அமையவேண்டும். அதன்பின்னர் கோட்டா வீட்டுக்குப் போ என்ற கோஷத்தை வைப்பதுதான் நியாயமானதாக இருக்கும். அவ்வவாறு கோரிக்கை வைக்கின்றபோது, கோட்டா வீட்டுக்குப் போனாலும், மக்கள் ஆதரவு பெற்ற ஒரு தலைவர் பாராளுமன்றம் ஊடாக ஜனாதிபதியின் கதிரையில் அமரலாம். அதைவிடுத்து, இந்த பாராளுமன்றத்தையே வைத்துக்கொண்டு, கோட்டாவை வீட்டுக்குப் போ என்பது பொருத்தமானதாக இருக்காது.

கோட்டாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருகின்றோம் என்று கொண்டுவந்து, பின்னர் ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கை இல்லா பிரேணை கொண்டுவர அரசியலமைப்பு சட்டத்தில் இடமில்லை என்பதால் அது அவநம்பிக்கை பிரேரணையாக மாற்றம் பெற்றதும், வாசகர்களுக்கு தெரிந்ததுதான்.

ஆனால், இவ்வாறு ஜனாதிபதிக்கு எதிராக எதற்கும் பயனற்ற தீர்மானம் கொண்டுவருவதற்கு முயற்சித்தவர்களே, பாராளுமன்றத்தை முற்கூட்டியே கலைத்து, பொதுத் தேர்தல் ஒன்றிற்கு போவதற்கான தனிநபர் பிரேரணையை கொண்டு வந்திருக்கலாமோ, என்னவோ?

கோட்டாவை வீட்டுக்கு போ என்று போராட்டம் செய்பவர்கள், முதலில் இந்த பாராளுமன்றத்தை கலைத்து, அங்குள்ள இருநூற்றி இருபத்து ஐந்து உறுப்பினர்களையும் முதலில் வீட்டுக்கு அனுப்பக்கோரி போராட்டத்தை நடாத்த வேண்டும்.

அவ்வாறு அவர்களை வீட்டுக்கு அனுப்பிய பின்னர், நீங்கள் தெரிவுசெய்த புதிய உறுப்பினர்களிடையே இருந்து ஒருவரை தெரிவுசெய்த பின்னர்தான், கோட்டாவை வீட்டுக்கு செல்லக் கோரிக்கை வைக்கவேண்டும்.

ஆனால், மீண்டும் ஒரு தேர்தல் என்பது, இன்னமும் மூன்று மாதங்களுக்கு ஒரு நிலையான அரசு இல்லாமல் போகவும் வழிவகுக்கும். இந்தக் காலம், நாட்டை இன்னும் இன்னும் நெருக்கடிக்குள் தள்ளவும் செய்யலாம்.

என்னதான் ரணில் மாயாஜாலம் காட்டினாலும், அவரை நிம்மதியாக இருந்து அரசாங்கத்தை நடாத்த இன்றைய பொதுஜன முன்னணியினர் இடம்தரப்போவதில்லை. இருபத்தியோராவது திருத்தத்தை நிறைவேற்றுவதில் அவர் எதிர்கொள்ளப்போகும் சிக்கல்களே அவருக்கு அதனை உணரவைக்கும்.

- ஊர்க்குருவி

காலிமுகத்திடல் தாக்குதல்

## கைதான எம்.பிக்களுக்கு பிணை மறுக்கப்பட்டது!

கொழும்பு, மே 30

கடந்த மே 9ஆம் திகதி காலி முகத்திடல் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சனத் நிஷாந்த மற்றும் மிலன் ஜயதிலக ஆகியோருக்கு பிணை மறுக்கப்பட்டுள்ளது.

இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் கொழும்பு - மொறட்டுவை மாநகர முதல்வர் சமன்லால் பெர்னாண்டோவும் கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேசமயம், பாராளுமன்ற உறுப்பினர்களும் நுளம்பு தொல்லைக்கு மத்தியில் தரையில் உறங்குகின்றனர். அவர்களின் குடும்ப அங்கத்தவர்களையும் பார்க்க தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அரசியல் மட்டத்தில் வதந்திகளாக சில தகவல்கள் உலா வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 74ஆவது வயதிலும் ஓ. எல். எழுதியவர்!



கொழும்பு, மே 30

தனது 74ஆவது வயதில் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றியுள்ளார் முதியவர் ஒருவர்.

காலி - நெலுவ களுபோவிட்டியன என்ற இடத்தை சேர்ந்த கலன்கொடகே சந்திரதாச என்ற முதியவரே இவ்வாறு பரீட்சைக்கு தோற்றியுள்ளார்.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற விருப்பம் காரணமாகவே அவர் பரீட்சைக்கு தோற்றியுள்ளார்.

நேற்றைய தினம் நடந்த விஞ்ஞான பாடப் பரீட்சைக்கு தோற்றிய அவர் கணித பாட பரீட்சைக்கும் தோற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரணில் விக்கிரமசிங்கவுக்கு சகலரும் ஒத்துழையுங்கள்!

சம்பிக்க எம். பி. கோரிக்கை

கொழும்பு, மே 30

பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் விடயங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

43ஆம் படையணியின் தலைவரான பாட்டலி சம்பிக்க ரணவக்க கருத்து வெளியிடுகையில்,

"இதற்கு முன்னரும் 2001ஆம் ஆண்டில் நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டபோது ரணில் விக்கிரமசிங்கவால் அதனை வெற்றிகொள்ள முடிந்தது. இம்முறையும் அவர் அதனை வெற்றி கொள்வார் என்ற நம்பிக்கை உண்டு.

அதற்கு அனைவரும் பிரதமர் ரணிலுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இன்னும் இரண்டு மாதங்களுக்குள் இந்த நெருக்கடிகள் தீராது போனால் நாடு முழுவதும் பெரும் எதிர்ப்பு வெடிக்கும்" என்றும் அவர் எச்சரித்தார். (ஐ)



## 21ஆம் திருத்த சட்டம் குறித்து அமெரிக்க தூதருக்கு விளக்கம்!

கொழும்பு, மே 30

அரசமைப்பின் 21ஆவது திருத்த சட்ட வரைவு தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சிகளுடனான கலந்துரையாடல், பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும் நல்லிணக்கம் தொடர்பான பிரச்னைகளுக்குத் தீர்வு என்பவை தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவருக்கு வெளிவிகார அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசினர்.

இந்தப் பேச்சில், இருதரப்பு உறவுகள், தற்போதைய உள்நாட்டு அபிவிருத்திகள் மற்றும் நாடு எதிர்கொள்ளும் சவால்களைத் தணிப்பதற்கான சர்வதேச சமூகத்தின் உதவி ஆகியன குறித்து பரந்த அளவில் கலந்துரையாடப்பட்டன.

மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களைப் போக்குவதற்கும், தெளிவான செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் குறுகிய மற்றும் நீண்ட கால தீர்வுகளை வழங்குவதற்கும் சாத்தியமான அனைத்து வழிகளையும் ஆராய்வதில் அரசாங்கம் கவனம் செலுத்துவதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் இதன் போது குறிப்பிட்டார்.

இவ்வாறான நிலையில், பலதரப்பு நிறுவனங்கள் உட்பட சர்வதேச சமூகத்திடமிருந்து கிடைக்கப் பெறும் ஒத்துழைப்புக்களுக்கு அமைச்சர் பீரிஸ் பாராட்டு தெரிவித்தார்.

அமெரிக்கா இலங்கையின் நண்பன் என்றும் நாட்டில் உள்ள சவால்களை நன்கு புரிந்து கொள்வதாகவும் தூதுவர் சுங் தெரிவித்தார். இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## மதுபான வகைகளுக்கு புதிய தரம் நிர்ணயம்!

கொழும்பு, மே 30

நாட்டில் சில மதுபான வகைகளுக்கான புதிய தரநிர்ணயம் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், ஏனைய மதுபானங்களுக்கு, தரநிர்ணயம் செய்ய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மதுவரித் திணைக்கள ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தத் தரநிர்ணயங்களுக்கு அமையவே, இலங்கையில் மதுபானங்களை உற்பத்தி செய்யவும் இறக்குமதி செய்யவும் முடியுமென இறக்குமதியாளர்களுக்கும், உள்ளூர் மதுபான உற்பத்தியாளர்களுக்கும் கடந்தவாரம் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் மற்றும் இறக்குமதி செய்யப்படும் மதுபானங்கள், அந்த தரநிர்ணயங்களுக்கு அமையவே, இனிமேல் சந்தைக்கு வியோகிக்க அனுமதிக்கப்படும் என்றும் மதுவரித் திணைக்கள ஆணை யாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.மேலும், மதுபான உற்பத்தி நிலையங்களில், இதுவரையில் கையிருப்பில் உள்ள மதுபானங்களின் அளவு குறித்து, அறிக்கை கோரப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
30.05.2022திங்கட்கிழமை
பிலவ வருடம், வைகாசி 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# அமெரிக்க தூதுவரின் நம்பிக்கை?

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில், அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்த முடியுமென்று, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், தெரிவித்திருக்கின்றார். ரணில் விக்கிரமசிங்கவின் பதவியேற்பு தொடர்பில், எதிர்த்தரப்பினர் - பலவாறான அபிப்பிராயங்களை தெரிவித்துவரும் நிலையில் - அமெரிக்க தூதுவர் ரணிலின் தலைமைத்துவம் தொடர்பில் சாதகமான அபிப்பிராயங்களை வெளிப்படுத்தி வருகின்றார். இதனை அமெரிக்க தூதுவரின் கருத்தாக மட்டும் நோக்கக்கூடாது. ரணில் விக்கிரமசிங்கவின் வரவு தொடர்பில், மேற்குலகம் சாதகமான பார்வையை கொண்டிருக்கின்றது.

இந்த சாதகமான பார்வையைத்தான், அமெரிக்க தூதுவர் பிரதிபலிக்கின்றார். இன்றைய நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்காவிட்டால், பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீள்வது இயலாத காரியமாகும். இந்தியா உதவிகளை செய்தாலும்கூட, அதற்கு ஓர் எல்லையுண்டு. இந்தியாவுக்கும் பிரச்னைகள் உண்டு. எனவே, சர்வதேச நாணய நிதியத்தின் உதவி தவிர்க்கவே முடியாதது. சர்வதேச நாணய நிதியம் பிரத்தியேக அரசியல் நிகழ்ச்சிநிரலை கொண்டிருக்காவிட்டாலும்கூட, அமெரிக்காவின் ஆசிர்வாதம் திரைமறைவில் உண்டு. இந்தப் பின்னணியில்தான், பொருளாதார நெருக்கடியை கையாளும் பொறுப்பை ரணில் விக்கிரமசிங்க ஏற்றிருக்கின்றார்.

விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால், ரணில் விக்கிரமசிங்க வீழ்ந்துவிடாத வகையிலான ஒரு ஸ்திரமான அரசாங்கம் கட்டாயமானது. ரணில் தலைமையில், ஒரு ஸ்திரமான அரசாங்கம் இல்லையானால், நாடுகளின் உதவிகளைப் பெற முடியாது. இந்தப் பின்னணியில்தான், ரணில்மீதான நம்பிக்கை அதிகரித்திருக்கின்றது. ரணில் பாதுகாக்கப்பட வேண்டியது, ரணிலுக்கான அரசியல் என்பதற்கு அப்பால், நாட்டு மக்களுக்கான தேவையென்னும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. பிரதமர் ரணில் சுயாதீனமாக செயலாற்றக்கூடிய சூழல் இருந்தால் மட்டும்தான், ஒரு ஸ்திரமான அரசாங்கத்துக்கு அவர் தலைமையேற்க முடியும். இந்தப் பின்னணியில்தான் 21ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் உரையாடப்படுகின்றது. ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதுதான் இதன் பின்னாலுள்ள அடிப்படையான விடயம்.

21ஆவது திருத்தச் சட்டத்தில் பல விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டுமென்னும் அபிப்பிராயங்கள் இருக்கின்றன. ரணிலைப் பொறுத்தவரையில், தான் சுயாதீனமாக இயங்குவதற்கான சூழலை உருவாக்குவது தொடரபிலேயே கவனம் செலுத்துவதற்கான வாய்ப்புக்களே அதிகம். குறிப்பாக, இரட்டை குடியுரிமை விவகாரம் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டாலும்கூட, அதனை நீக்குவதை பொதுஜன பெரமுன தரப்பினர் எதிர்த்தால், 21ஐ நிறைவேற்றுவதில் சங்கடங்களை எதிர்கொள்ள நேரிடலாம். மேலும், இரட்டை குடியுரிமை விவகாரமனது, பஸில் ராஜபக்ஷ தொடர்பான விடயமாகவே நோக்கப்படுகின்றது. நாட்டின் தற்போதைய நிலையில், ஒருவரின் விடயத்தை கருத்தில் கொண்டு முடிவுகளை எடுப்பதா - அல்லது நெருக்கடி நிலைமையை வெற்றி கொள்வதற்கான வழிகளைத் தேடுவதா என்னும் கேள்வியேற்பட்டால், இரட்டை குடியுரிமை விவகாரம் கண்டுகொள்ளாமல் விடப்படவும் அதிக வாய்ப்புண்டு.

ஏனெனில், இப்போதைக்கு ரணிலின் அதிகாரங்கள் உறுதிப்படுத்தப்படுவதே முக்கியமான விடயமாக நோக்கப்படுகின்றது. அது நடைபெற வேண்டுமானால், முதலில் 21ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்ட வேண்டும். அதற்கு, பொதுஜன பெரமுனவின் ஆதரவு கட்டாயமானது. அமெரிக்க மற்றும் மேற்குலக நாடுகளும் இந்த அடிப்படையில்தான் விடயங்களை நோக்கும்.

ரணில்மீதான நம்பிக்கையை அமெரிக்க தூதுவர் வெளிப்படுத்திவரும் சூழலில், அமெரிக்காவின் ஆதரவை கோரும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணில் தொடர்பில் கருத்துக்களைக் கூறும்போது, கவனம் செலுத்த வேண்டிய அவசியம். கூட்டமைப்பிலுள்ள இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் - அவர்களின், முத்திச்சியின்மையின் காரணமாக உணர்ச்சிவசப்பட்டாலும் கூட, கூட்டமைப்பின் மூத்த அரசியல்வாதிகள் அவர்களை நெறிப்படுத்தி, விடயங்களை பொறுப்புடன் நோக்குவதற்கு கற்றுக்கொடுக்க வேண்டும். அந்த வகையில், மாவை சேனாதிராசா, சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் போன்றவர்கள் மிகுந்த பொறுப்புடன் செயலாற்ற வேண்டும்.

# ‘கோட்டா கோ கம’- 50

அலசுவது இராஜதந்திரி

அரசாங்கத்தின் தவறான பொருளாதார கொள்கைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட ‘கோட்டா கோ கம’ காலி முகத்திடல் ஆர்ப்பாட்டம் ஐம்பது (50) நாட் களைக் கடந்துள்ளது.



தென்னிலங்கையில் தொடர்ச்சியாக 50 நாட்கள்வரை ஓர் ஆர்ப்பாட்டம் ஒரே இடத் தில் இடம்பெற்று வருவது இதுவே முதல் தடவையாகும். ‘கோட்டா கோ கம’ என்பதன் அர்த்தம் கோட்டாபய ராஜபக்ஷவே போய் விடு என்பதோடு இந்தக் கோஷம் ஒரு தற்கா லிக கிராமமாகவும் மாறியுள்ளதென்பதாகும்.

எனவே, ‘கோட்டா கோ கம’ என்பது ஆங்கிலத்தில் கோட்டாவே போய்விடு எனவும் ‘கம’ என்பது சிங்களத்தில் கிராமத்தை குறிப்பதாகவும் இருக்கின்றது.

இந்த அமைதியான ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்கு பிரதம மந்திரியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையில் இருந்து கலகக்காரக் கும்பலொன்று காலிமுகத்திடல் வரை முன்னேறி தனது கைவரிசையைக் காண்பிக்க முனைந்தது. இருந்தபோதிலும் ‘கோட்டா கோ கம’ ஆர்ப்பாட்டம்மீதான அனுதாபிகள் கலகக்காரர்களை எதிர்கொண்டிருந்தனர். இதன் விளைவாக நாடளாவிய ரீதியில் தென்னிலங்கையின் பல்வேறு இடங்களிலும் வன்முறைகள் வெடித்து பொருள்சேதங்கள், உயிர்ச்சேதங்கள் என்பவை ஏற்பட்டிருந்தன.

‘கோட்டா கோ கம’ ஐம்பது நாட்களைக் கடந்துள்ளது என்று குறிப்பிடும்போது ஒரு திரைப்படம் ஐம்பது நாட்களைக் கடந்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றது என்பது போன்ற அபிப்பிராயமே ஏற்படும்.

ஆயினும், ‘கோட்டா கோ கம’ சாதித்தவற்றைவிட உறுதிப்பாட்டோடு நிலை தளராது அல்லது தனது கோரிக்கைகளில் இருந்து பின் வாங்காது நகர்ந்து கொண்டிருக்கின்றதென்றே குறிப்பிட முடியும். இதன் மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து விலக வேண்டுமென்ற மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்பது உறுதியாகியுள்ளதுடன் வன்முறைகளால் அமைதி வழிப்போராட்டங்களைக் கலைத்துவிட முடியாதென்பதுவும் தெட்டத்தெளிவாகியுள்ளது.

வடக்கு - கிழக்கில் அமைதி வழிப்போராட்டங்களை அடக்க முற்பட்டதன் விளைவாகவே மூன்று தசாப்த கால யுத்தம் மிக மோசமான முறையில் வெடித்திருந்தது. எனவே, அமைதியாக நடந்த ‘கோட்டா கோ கம’ ஆர்ப்பாட்டத்தின் மீது கைவைக்க முற்பட்டதன் விளைவாக அரச சார்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் உடைமைகள் சேதமாக்கப்பட்டன. அத்துடன் இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன், முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் அவரது அமைச்சராக இருந்த ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் அரச தரப்பு அமைதிவழி ‘கோட்டா கோ கம’ போராட்டத்தை தவறாக கையாள முற்பட்டதன் மூலம் தனது தலையில் தானே மண்ணை வாரிப்போட்டுவிட்டது போன்ற நிலைக்குள்ளாகியுள்ளது.

‘கோட்டா கோ கம’ ஆர்ப்பாட்டம் நடந்து கொண்டிருக்கையில் அவ்வப்போது அதற்கு ஆதரவாக வீதிகளில் ஆர்ப்பாட்ட பேரணிகளும் இடம்பெற்றிருந்தன.

இந்தப் பேரணிகளை முறியடிக்க கண்ணீர் புகைப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன், பொலிஸ் கலகமடக்கும் வாகனங்கள் தண்ணீரை வேகமாகப் பிரயோகித்து பேரணி நடத்தியோரின் மன உறுதியை நிலைதளர வைக்க முற்பட்டன. ஆயினும் ‘கோட்டா கோ கம’ ஆர்ப்பாட்டம் நிலை தளராது தற்போது ஐம்பது நாட்களை பூர்த்தி செய்துள்ளது.


‘கோட்டா கோ கம’ ஆர்ப்பாட்டத்தின் மற்றுமொரு முக்கிய பரிமாணம் என்னவெனில் அனைத்து இன, மத மக்களையும் ஒரு குடையின் கீழ் திரட்டியமையாகும். இதன் மூலம் இன்றைய ஆட்சியாளர்கள் நாட்டு மக்கள் அனைவராலும் நிராகரிக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தி வெளி உலகுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்தகைய பின்னணியல் ‘கோட்டா கோ கம’ ஆர்ப்பாட்டம் ஐம்பது தினங்களைக் கடந்த நிலையில் அடுத்து எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கப்போகின்றது என்ற கேள்வி எழுந்துள்ளது.

பொருளாதார சீர்கேட்டுக்கு எதிரான நடவடிக்கையாக தோற்றம் பெற்ற ‘கோட்டா கோ கம’ ஆர்ப்பாட்டம் பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ஷவையும் அப்பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ய வைத்திருந்தது.

இதேவேளை ‘கோட்டா கோ கம’ ஆர்ப்பாட்டத்தின் ஐம்பது நாட்கள் தினங்கள் பூர்த்தியாகியுள்ள தருணத்திலேயே அரசியலமைப்பில் 21ஆவது திருத்தச்சட்டம் குறித்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தல் மற்றும் இரட்டைக் குடியுரிமை இருப்போருக்கு பாராளுமன்ற அங்கத்துவங்களை வகிக்க தகுதியின்மை போன்றவற்றை 21ஆவது திருத்தச்சட்டம் மூலமாக அரசியலமைப்பில் சேர்ப்பதற்கான முன்னெடுக்கப்படும் பட்சத்தில் ‘கோட்டா கோ கம’ வின் அழுத்தங்கள் 21ஆவது திருத் தச் சட்டம் தொடர்பாக ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றே கருதலாம்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






மே - 30 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - வைகாசி 16
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : அமாவாசை

**மேடம்**
விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். ஆடம்பரச் செலவு அதிகம் செய்ய நேரிடும்.பிரச்னைகளில் ஒன்று முடிவிற்கு வரும். மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பாராத செலவு ஏற்படும்.

**இடபம்**
செலவு கட்டுப்படும். குடும்பத்தினருடன் மகிழ்வீர்கள். குடும்பத்தினருடன் வெளியில் செல்வீர்கள். உறவினர் வருகையால் சந்தோஷம் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு ஒன்று நிறைவேறும்.

**மிதுனம்**
பணவரவும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும். ஆனால் திடீர் செலவுகளைச் சந்திப்பீர்கள்.உடல் நிலையில் இருந்த பிரச்னைகள் விலகும்.சங்கடங்களில் இருந்து விடுபட்டு மகிழ்வீர்கள்.

**கடகம்**
சந்தோஷமான மனநிலை உருவாகும். நல்ல நாள்.தொழிலில் புதிய உத்தியைக் கையாள்வீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும். நண்பர்களால் மகிழ்வீர்கள். தொழிலில் இருந்த தடைகள் விலகும்.

**சிம்மம்**
விருப்பம் இன்று நிறைவேறும். மதியத்திற்கு மேல் உங்களுடைய செயல்களில் நன்மை காண்பீர்கள். குழப்பத்தில் இருந்து விடுபடுவீர்கள். குடும்பத்தின் மீது ஈடுபாடு கூடும். தொழிலை விரிவு செய்வீர்கள்.

**கன்னி**
குடும்பத்தினருடன் பொழுது போக்குவீர்கள்.நெருக்கடி விலகும். பயணத்தை தவிர்ப்பது நல்லது. இரண்டு நாளாக இருந்த சங்கடம் விலகும். நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

**துலாம்**
வீண் பிரச்னையை சந்திப்பீர்கள். அந்நியர் தொந்தரவுகளால் உங்கள் மனம் அவதிப்படும். குடும்பத்தில் நெருக்கடி அதிகரிக்கும். உங்கள் மனதில் தேவையற்ற குழப்பம் மேலோங்கும்.

**விருட்சிகம்**
சந்தோஷம் அதிகரிக்கும். கணவன் மகிழ்ச்சியான நாள்.குடும்பத்தினரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தினரின் ஆலோசனைகளைக் கேட்டு செயல்படுவீர்கள்.

**தனுசு**
பிரச்சினைகளுக்கு முடிவு கட்டுவீர்கள். ஆதாயம் காண்பீர்கள். எதிரிகளின் தொல்லை நீங்கும். திறமை இன்று வெளிப்படும். குடும்பத்தினரிடம் மகிழ்ச்சியைக் காண்பீர்கள். செலவுகள் கூடும்.

**மகரம்**
உறவுகளால் உண்டான சங்கடம் விலகும். திட்டமிட்டு செயல்பட்டு தேவையை அடைவீர்கள்.குடும்பத்தினர் ஆலோசனையைக் கேட்டு செயல்படுவீர்கள். மனதில் சந்தோஷம் கூடும்.

**கும்பம்**
செயல்களில் வேகம் அதிகரிக்கும். வருமானத்தால் மகிழ்ச்சியான மனநிலையுடன் இருப்பீர்கள். உங்களுடைய முயற்சி வெற்றி பெறும். எதிர்பார்ப்பு ஒன்று நிறைவேறும். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
எண்ணம் நிறைவேறும். குடும்பத்தினரின் தேவையறிந்து செயல்படுவீர்கள். செல்வாக்கு உயரும். மகிழ்ச்சியான நாள்.விருந்து விசேஷம் என செல்வீர்கள். சகோதரர்கள் வழியில் நன்மையை எதிர்பார்க்கலாம்.

# இரண்டாம் கட்ட நிவாரண உதவியை கே.கே.எஸ். வழியாக அனுப்ப முடிவு!



தூத்துக்குடி, மே 30

தமிழ்நாடு அரசாங்கம் இலங்கைக்கு அனுப்பும் இரண்டாம் கட்ட நிவாரணப் பொருட்கள் நேற்றுமுன் தினம் தூத்துக்குடி துறை முகத்திற்கு எடுத்து வரப்பட்டன.

இலங்கையில் நிலவும் கடும் பொருளாதார நெருக் கடி காரணமாக இலங்கை மக்களிற்காக தமிழ்நாடு அரசு ஏற்கனவே 40 ஆயிரம் தொன் நிவாரணப் பொருட்கள் கொழும்பு வழியாக அனுப்பிய நிலைமையில் இரண்டாம் கட்டம் காங்கேசன்துறை ஊடாக அனுப்பி வைக்க இந்திய அரசு நடவடிக்கை மேற் கொண்டது. இதன் பயனாக தூத்துக்குடி துறை முகத்திற்கு பொருட்கள் கொண்டு வரப் பட்டுள்ளன.

இவ்வாறு கொண்டு வரப்பட்ட நிவாரணப் பொருட்களை அனுப்பும் நடவடிக்கையை தூத் துக்குடி மாவட்ட ஆட்சியர் டாக்டர் கே.செந் தில் ராஜ் நேற்று நேரில் ஆய்வு நடவடிக்கையில் ஈடுபட்டார்.

முதல் கட்டமாக இலங்கைக்கு 10 ஆயிரம் தொன் அரிசி வழங்கப்பட்ட நிலையில், தற்போது 30 ஆயிரம் தொன் அரிசி அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இந்தப் பொருட்கள் அடுத்த சில நாட்களில் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மொழியை திணிக்கவோ எதிர்க்கவோ வேண்டாம்!

## இந்திய உப ஜனாதிபதி



சென்னை, மே 30

தாய்மொழியை வளர்க்க வேண்டும். அதேநேரம், எந்த மொழியையும் திணிக்கவும் வேண்டாம், எதிர்க்கவும் வேண்டாம் என்று குடியரசு துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடு கூறினார்.

சென்னையில் கருணாநிதியின் சிலையை திறந்து வைத்த அவர், பின்னர் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் பேசியபோதே இதனைத் தெரிவித்தார்.

மேலும், இந்தியாவின் ஆற்றல் மிகுந்த முதல்வர்களில் கருணாநிதியும் ஒருவர். சிறந்த நிர்வாகி என்பதுடன், அடித் தட்டு மக்களுக்காகவும், ஒடுக்கப்பட்டவர்களுக்காகவும் உழைத்தவர். அனைவருக்கும் சமூகநீதியை வழங்கியவர்.

ஜனநாயகத்தில் ஏற்பதும், மறுப்பதும் அவசியம். பொதுவாழ்வில் அரசியல்வாதிகள் ஒருவருக்கொருவர் மதிக்க வேண்டும். பல்வேறு கட்சிகள், சிந்தனைகள், வெவ்வேறு வழிகளில் செயல்பட்டாலும், அனைவரும் பணியாற்றுவது மக்களுக்காகத்தான் என்பதை உணர வேண்டும். நாம் எதிரிகள் அல்ல அரசியல் மாற்றுக் கருத்து உடையவர்கள்தான். நவீன அரசியல்வாதிகளுக்கு இதை அறிவுரையாகக் கூறுகிறேன்.

நமது சிந்தனைகள், எழுத்து, செயல்பாடுகள் மக்களை மையப்படுத்தியே இருக்க வேண்டும். தற்போது இந்தியா அதை நோக்கிச் செல்கிறது என்பதில் ஐயமில்லை. பலம் வாய்ந்த நாடாக, நிலைத்த அரசு மற்றும் சிறந்த தலைமையின் கீழ் தேசம் உள்ளது. பல்வேறு கட்சிகள் மாநிலங்களை ஆட்சி செய்தாலும், அனைவரும் இணைந்து மக்களின் நலனுக்காக உழைக்க வேண்டும். மாநிலங்கள் வளர்ந்தால் நாடு வளரும். மாநிலங்கள் வளராமல் நாடு வளராது. எனவே, மாநில நிர்வாகமும், மத்திய அரசும் இணைந்து செயல்பட வேண்டும்.

எல்லா இந்திய மொழிகளும் வளம் கொண்டவை. அதேநேரம், தாய்மொழி, தாய் நாடு முக்கியம். தாய்மொழி என்பது நமது கண்களைப் போன்றது. இதர மொழிகள் கண் கண்ணாடியைப் போன்றவை. இதை மனதில் கொள்ள வேண்டும். அனைவரும் வீட்டில் தாய்மொழியில் பேசுங்கள். தாய்மொழியை வளர்க்க வேண்டும். அதேநேரம், இதர மொழிகளைக் கற்பதில் தவறில்லை. கருணாநிதி தமிழ் மொழி, தமிழ்க் கலாசாரம், தமிழ் இலக்கியத்தை வளர்த்தார். நம் மொழிக்கு ஆதரவு அளிக்க வேண்டும். அதே நேரம், எந்த மொழியையும் திணிக்கவும் வேண்டாம் எதிர்க்கவும் வேண்டாம் - என்றார். (ஐ)

# ஸ்டாலினிடம் வாழ்த்து பெற்றார் பா. ம. கவின் புதிய தலைவர்!

சென்னை, மே 30

பாட்டாளி மக்கள் கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட அன்புமணி ராமதாஸ், சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள இல்லத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

பா. ம. கவின் புதிய தலைவராக அன்புமணி ராமதாஸ் நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றுக் கொண்டார். இந்நிலையில் நேற்று காலை சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள இல்லத்தில் தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினை சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

பின்னர் அன்புமணி ராமதாஸ் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: " நேற்று (நேற்று முன்தினம்) பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவராக பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்தில் உள்ள மூத்த தலைவர்களை சந்தித்து அவர்களுடைய வாழ்த்துகளைப் பெற வேண்டும் என முடிவு செய்தேன்.

தமிழக முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்து, அவருடைய வாழ்த்துகளைப் பெற்றேன். இது மரியாதை நிமித்தமான ஒரு சந்திப்பு. இந்த சந்திப்பின்போது அரசியல் எதுவும் பேசவில்லை. அவரும் மனதார வாழ்த்தினார். தொடர்ந்து அனைத்து மூத்த தலைவர்களையும் சந்திக்கவிருக்கிறேன்.

பின்னர், சட்டப்பேரவை எதிர்கட்சித் தலைவரும், அ.தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளருமான எடப்பாடி பழனிசாமியை அவரின் இல்லத்தில் சந்தித்து அன்புமணி ராமதாஸ் வாழ்த்துப் பெற்றார். (ஐ)

ஈழநாடு



# இந்தியாவிடம் கச்சதீவை விட்டுக்கொடுக்கமுடியாது!

## செல்வம் அடைக்கலநாதன் எம். பி.



வவுனியா, மே 30

கச்சதீவை விட்டுக் கொடுக்க முடியாது. பாதுகாப்பு விடயத்தில் இந்தியா அச்சம் கொள்ளத் தேவையில்லை என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் செய்தியாளரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாரதப் பிரதமர் தமிழ் நாட்டிற்கு வந்திருந்த போது கச்சதீவு பிரச்னை எழுப்பப்பட்டது. கச்ச தீவை மீட்பதற்கு இது சரியான தருணம். ஆகவே அதனை மீட்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழக முதலமைச்சர் ஊடாக பாரத பிரதமரிடம் முன் வைத்தது மன வருத்தம் தருகின்றது.

இந்திய அரசாங்கம் இலங்கையில் பொருளாதாரப் பிரச்னை ஏற்பட்டபோது முதன்முதலில் உதவி செய்த அரசாங்கமாக உள்ளது. பல உதவிகளை அவர்கள் செய்து வந்தார்கள். அதே நேரத்தில் தமிழ்நாட்டு முதலமைச்சர் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் வாழும் மக்களுக்கு உதவி செய்ய காத்திருக்கின்றோம் என்ற கருத்தை முன் வைத்த போது எங்கள் தரப்பில் இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் தமிழ் நாடு உதவி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை நாம் முன்வைத்தோம்.

இந்த பொருளாதாரப் பிரச்னை சிங்கள மக்களையும் பாதித்திருக்கிறது. இதுதான் தமிழர் பண்பாடு என்ற விடயத்தை முதலமைச்சருக்கு எடுத்துக் கூறினோம். இலங்கை பூராகவும் அவர்களுடைய உதவி வந்து கொண்டிருக்கிறது.

அத்துடன், இந்தியாவில் ஒரு சிறுமி சைக்கிள் வாங்க வைத்திருந்த பணத்தை எங்களுடைய மக்களுக்கு கொடுக்கின்ற நெகிழ்ச்சியான விடயத்தைப் பார்க்க முடிந்தது. அன்றாடம் பிச்சை எடுத்து வாழும் ஒரு பெரியவர் தனது பணத்தை இலங்கை மக்களுக்கு கொடுக்கின்ற நிகழ்வையும் அறிந்தோம். இவ்வாறு தமிழ் நாட்டு மக்கள் இலங்கைப் பொருளாதாரப் பிரச்னைக்கு நல்லெண்ணத்துடன் உதவி செய்துள்ளார்கள்.

அந்த உதவிகளை எங்களால் மறக்க முடியாது. தமிழ்நாட்டு மக்கள் மற்றும் தமிழ் நாட்டு அரசாங்கத்தை நாம் மறக்க முடியாது. உண்மையில் கஷ்டப்படுகின்ற நிலையில் இருக்கும் போது கச்சதீவைப் பெறுவதென என தமிழக முதல்வர் எண்ணியது கவலை தருகிறது. இதனால் மனவருத்தம் அடைகின்றோம்.

தமிழர்களுக்கு தற்போதைய தமிழக முதல்வரின் தந்தையார் பெரும் சேவைகளை செய்துள்ளார். இந்த நிலையில் கஷ்டமான நிலையைப் பயன்படுத்தி கச்சதீவை இந்தியா பெற முயல்வது ஏற்றுக் கொள்ள முடியாது. கச்சதீவைப் பொறுத்தவரை அதில் எங்களது மீனவர்கள் பயன்பெறும் வாய்ப்பு கூட இருக்கிறது. கச்சதீவை விட்டுக் கொடுக்க முடியாது. அது தமிழர்களின் தீவாக உள்ளது.

வடக்கில் வாழும் தமிழர்கள் பயன்படுத்தும் தீவாக இருக்கின்ற போதும், இந்தியாவுக்கு பங்கம் ஏற்படும் வகையில் அதனை பயன்படுத்த தமிழ் மக்கள் ஒரு போதும் அனுமதியளிக்க மாட்டார்கள். அதனால் இந்திய தனது பாதுகாப்பு விடயத்தில் அச்சம் கொள்ளத் தேவையில்லை - என்றார். (ஐ)

# மருந்து தட்டுப்பாடுகளுக்கு இரு மாதங்களுக்குள் தீர்வு!

## சுகாதார அமைச்சர் கெஹலிய உறுதி



**கொழும்பு, மே 30**

**இலங்கையில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டு பிரச்னை இரண்டு மாதங்களுக்குள் தீர்க்கப்படும் என்று சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

மருந்துகளை கோரியதன் பின்னரே மருத்துவ நிறுவனங்கள் அவற்றின் உற்பத்தி பணிகளை ஆரம்பிக்கும் என்பதால், மருந்துகளை இறக்குமதி செய்ய மூன்று மாதங்கள் ஆகும்.

இந்த விடயம் தொடர்பில் எமது செய்தி சேவைக்கு கருத்துரைத்த அவர், மருந்து இறக்குமதிக்காக 400 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைத்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

எனினும்,இந்த விடயம் தொடர்பில் முன்னணி மருந்து நிறுவனங்களிடம் கலந்துரையாடப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களுக்குள் அவர்கள் மருந்துகளை விநியோகிப்பதாக அந்த நிறுவனங்கள் உறுதியளித்துள்ளன என்றும் கூறினார். (ஐ)

# 21ஆம் திருத்தத்துக்கு சுதந்திர கட்சி ஆதரவு



கொழும்பு, மே 30


21 ஆவது திருத்த சட்டத்துக்கு தமது கட்சி பூரண ஆதரவளிப்பதாக சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றின் மூலம் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் பல யோசனைகளை அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் இந்த திருத்தத்தில் உள்ளடக்குமாறும் அவர் முன்வைத்துள்ளார். (ஐ)

# நாட்டை நிமிர்த்த முடியாவிடின் நான் பதவி விலகிச் செல்வேன்!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, மே 30

"நாட்டை என்னால் நிமிர்த்த முடியாவிட்டால் பிரதமர் பதவியிலிருந்து விலகிச் சென்றிடுவேன்" - இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"மற்றவர்கள் போல் எனக்குப் பதவி ஆசை இல்லை. நாட்டின் நலன் கருதியே பிரதமர் பதவியை ஏற்றேன். அதேவேளை, ஜனாதிபதியின் வேண்டுகோளின் பிரகாரம் நிதி அமைச்சையும் பொறுப்பேற்றேன்.

நான் உறுதியளித்தது போன்று அனைத்து விடயங்களையும் நேரடியாகவே கண்காணித்து வருகின்றேன். சர்வதேச நாடுகளின் முக்கியஸ்தர்களுடனும், உதவிகள் வழங்கும் சர்வதேச நிறுவனங்களுடனும் பேச்சு நடத்தி வருகின்றேன்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பிலும், எதிர்கால நிலைமை குறித்தும் உண்மைத் தகவல்களையே நான் வெளியிட்டு வருகின்றேன். எனது கருத்துக்கள் தொடர்பில் எவரும் பதற்றம் அடையத் தேவையில்லை.

நாட்டை நிமிர்த்துவதே எனது குறிக்கோள். இதை என்னால் செய்யமுடியாது போனால் பிரதமர் பதவியிலிருந்து விலகிச் சென்றிடுவேன்" - என்றார். (ஐ)

# வீடுகள், தொழிற்சாலைகளுக்கு சூரிய சக்தி மூலம் மின்சாரம்!

## அமைச்சர் காஞ்சன விஜயசேகர



கொழும்பு, மே 30

வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு சூரிய சக்தியின் ஊடாக மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான வேலைத் திட்டம் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் காஞ்சன விஜயசேகர இதனை தெரிவித்தார்.

இதன் மூலம் பகல் வேளையில் மின்சாரத்தை பெறமுடியுமாயின் தற்போது மின்னுற்பத்திகாக பயன்படுத்தப்படும் நீர் மற்றும் எரிபொருளை பயன்படுத்தி இரவு வேளையில் தடையின்றி மின்சாரம் வழங்க முடியும்.

இதற்கமைய 24 மணிநேரமும் துண்டிப்பின்றி மின்சாரத்தை விநியோகிப்பதற்கான வாய்ப்பு ஏற்படும். இதற்காக நுகர்வோருக்கு அனுமதியை வழங்குவதற்கும் அவசியமான வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கும் அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (ஐ)

# சிறுதானிய பயிர் ஊக்குவிப்பு யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மே 30

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் இராசதானியம் என்ற பெயரில் சிறுதானியங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

சிறுதானியங்களை மீள முடிசூட்டுவோம் என்ற மகுடவாசகத்துடன் முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் தொடக்க நிகழ்ச்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை அச்சுவேலி பத்தமேனியில் நடைபெற்றது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் வளவாளர்களாக ஓய்வுநிலை பிரதி விவசாயப் பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன், சமூகச் செயற்பாட்டாளர் ம. செல்வின் இரேனியஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டத்தில் அச்சுவேலிப் பகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 100 விவசாயிகளுக்கு குரக்கன், வரகு, பயறு ஆகியவற்றின் விதைகள் இலவசமாக வழங்கப்பட்டன.




விவசாயிகள் பெற்றுக் கொண்ட விதைகளின் இரண்டு மடங்கு விதைகளை அறுவடையின் பின்னர் ஏனைய விவசாயிகளுக்கு வழங்கும் நோக்கில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்திடம் கட்டணம் எதுவுமின்றி வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளுடனேயே விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

சிறுதானிய உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கான வசதிகளைத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் விவசாயிகளுக்குச் செய்துகொடுக்கும் எனவும் இத்திட்டத்தில் இணைந்து பயன்பெற விரும்பும் விவசாயிகள் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்துடன் தொடர்புகொண்டு சிறுதானிய விதைகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நீண்டநாட்களின்பின் மன்னாரில் மண்ணெண்ணெய் விநியோகம்!

மன்னார், மே 30

மன்னார் - பள்ளிமுனை வீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நீண்ட நாட்களுக்கு பின்னர் நேற்று ஞாயிற்றுக் கிழமை மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது.

அதிகாலை முதலே மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து மண்ணெண்ணையை பெற்று சென்றனர். குடும்ப அட்டையின் அடிப்படையில் ஒரு குடும்பத்துக்கு 500 ரூபாய்க்க மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது.

குடும்ப அட்டைகள் வழங்கப்படாத, இல்லாத நபர்களுக்கு கிராம சேவகர்களின் உறுதிப்படுத்தலுடன் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது.

மண்ணெண்ணெய் விநியோகம் நேர்மையாக நடப்பதை உறுதி செய்ய கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். அத்துடன், எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு பொலிஸ், இராணுவ பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது. (ஐ)

# சிறுமி பாத்திமா மரணம் விசாரணை சி. ஐ. டியிடம்!

கொழும்பு, மே 30

சிறுமி பாத்திமா ஆயிஷாவின் மரணம் தொடர்பான விசாரணை அறிக்கைகள் குற்றப்புலனாய்வு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

களுத்துறை பண்டாரகமை - அட்டுலுகமையை சேர்ந்த குறித்த சிறுமி வெள்ளிக்கிழமை காணாமல் போன நிலையில் மறுநாளான நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டார்.

இதனை தொடர்ந்து, சிறுமியின் மரணம் தொடர்பான விசாரணைகளுக்காக 3 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில், பொலிஸார் விசாரணை அறிக்கைகள் குற்றப்புலனாய்வு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஐ)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 21.12.1961

மறைவு 23.05.2022



யாழ் புங்குடுதீவு 10ம் வட்டாரம் ஆலடிச் சந்தியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Ratingen, கனடா Toronto, சுவிஸ் Zurich ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

## திரு கிருஷ்ணமூர்த்தி கதிர்காமு

அவர்கள் 23.05.2022 திங்கட்கிழமை அன்று சுவிஸில் இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

கணேசமூர்த்தி (ஜேர்மனி)

தணிகாசலம் (சுவிஸ்)

கண்ணன் (சுவிஸ்)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முற்படுமாறு மகிந்தவுக்கு அழைப்பு!

கொழும்பு, மே 30

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உட்பட சில அமைச்சர்களை வாக்குமூலம் அளிப்பதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் எதிர்வரும் புதன்கிழமை முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - காலிமுகத்திடலில் “கோட்டா கோ கம” மற்றும் “மைனா கோ கம” பேமீது மே 9ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பிலேயே இவர்களிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படவுள்ளன.

மகிந்த ராஜபக்ஷவுடன் முன்னாள் அமைச்சர்களான நாமல் ராஜபக்ஷ , ரோஹித அபேகுணவர்த்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரமேஷ் பத்திரண ஆகியோரையும் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அவன்ட் கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸங்க சேனாதிபதி நாளை திங்கட்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்களுடன் வடரெகா சிறைச்சாலை கைதிகள் குழுவொன்று தொடர்புபட்டுள்ளதாக எழுந்த குற்றச்சாட்டை விசாரிப்பதற்காகவே நிஸங்க சேனாதிபதி அழைக்கப்பட்டுள்ளாரென மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் முன்னதாக ஆணைக் குழுவால் அழைக்கப்பட்டிருந்தார்.

மேல் மாகாண பொலிஸ் மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோரையும் எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

# சுயாதீனமாக மத்திய வங்கி செயல்பட முழு ஒத்துழைப்பு

கொழும்பு, மே 30

மத்திய வங்கியின் செயல்பாடுகளை சுயாதீனமாக முன்னெடுத்துச் செல்வதற்கான சகல ஒத்துழைப்புக்களையும் அரசாங்கம் வழங்கும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவிடம் உறுதியளித்துள்ளார்.

மத்திய வங்கி ஆளுனர் மற்றும் நிதிச் சபையின் உறுப்பினர் சஞ்சீவ ஜயவர்தன உள்ளிட்ட அதிகாரிகளுடன் ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

குறுகிய காலத்திற்குள நிதி நெருக்கடிகளை சமாளிப்பதற்கும் , நாட்டை சுமுகமான நிலைமைக்கு இட்டுச் செல்வதற்கும் மத்திய வங்கி ஆளுநர் முன்னெடுத்து வரும் செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி இதன் போது பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

பொருளாதாரத் துறையிலுள்ள நிபுணர்களின் பங்குபற்றலுடன் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடையும் என்று எதிர்பார்ப்பதாக மத்திய வங்கி ஆளுநர் இதன் போது தெரிவித்தார்.

பணவீக்கத்தைக் குறைத்தல் மற்றும் பொருளாதாரத்தை பலப்படுத்தல் என்பவற்றுக்காக முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து இதன் போது ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

அரசியல் தலையீடுகள் இன்றி இந்த நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு ஒத்துழைப்பினை வழங்குவதாக இதன் போது ஜனாதிபதி உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சிறுமி பாத்திமா மரணம் விரைவில் நீதி கிடைக்கும்!

## ஜனாதிபதி கோட்டாபய உறுதி

கொழும்பு, மே 30

சிறுமி பாத்திமா ஆய்ஷா அக்ரம் கொலை தொடர்பில் விரைவில் நீதி கிடைக்கும் என தாம் உறுதியளிப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ சமூகவலைத்தளத்திலேயே அவர் இந்தக் கருத்தைப் பதிவிட்டுள்ளார்.

ஈவிரக்கமற்ற முறையில் கொல்லப்பட்ட சிறுமி பாத்திமா ஆயிஷாவின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ வெளிப்படுத்தியுள்ளார்.

களுத்துறை - பண்டாரகமை - அட்டுலுகமையை சேர்ந்த சிறுமி பாத்திமா ஆய்ஷா அக்ரம் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டார்.

9 வயதான குறித்த சிறுமி கடந்த வெள்ளிக்கிழமை முதல் காணாமல் போயிருந்தார். தனது வீட்டிலிருந்து 250 மீற்றர் தொலைவில் உள்ள கடைக்கு சென்ற குறித்த சிறுமி மீண்டும் வீடு திரும்பியிருக்கவில்லை.

இதையடுத்து அவரின் பெற்றோர் பொலிஸாரிடம் முறைப்பாடளித்தனர். பொலிஸாரால் சி. சி. ரீ. வி. காணொலி காட்சிகள் ஆய்வு செய்யப்பட்டதோடு அதிலிருந்து கடைக்கு சென்று சிறுமி வீடு திரும்பும் காட்சிகள் பெறப்பட்டன.

எனினும், சிறுமியின் வீட்டிலிருந்து 150 மீற்றர் தொலைவில் எந்த சி. சி. ரீ. வி. காணொலி காட்சிகளும் காணப்படவில்லை என பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் சிறுமி பாத்திமா ஆய்ஷா அக்ரம், அவரின் வீட்டுக்கு அருகில் உள்ள சதுப்பு நிலம் ஒன்றில் சடலமாக மீட்கப்பட்டார்.

பின்னர் ஹொரணை பதில் நீதிவான் மற்றும் நீதிமன்ற சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதனையடுத்து சிறுமியின் சடலம் மரண பரிசோதனைகளுக்காக பண்டாரகமை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஐ)



# வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளுக்கு தீ!

திருகோணமலை, மே 30

வீட்டில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த மோட்டார் சைக்கிள் இனந்தெரியாதோ ரால் தீக்கிரையாக்கப்பட் டுள்ளது.

இந்தச் சம்பவம் திருகோ ணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானையில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் சனிக் கிழமை இடம்பெற்ற இச் சம்ப வம் தொடர்பில் தெரியவருவ தாவது,

மோட்டார் சைக்கிளுக்கு சொந்தக்காரரான ஏ. சி. பரீட் என்பவர் தனது மோட்டார் சைக்கிளை வீட்டு முற்றத்தில் வழமை போன்று நிறுத்தி விட்டு நித்திரைக்கு சென்றுள் ளார்.

நள்ளிரவு வேளை, தீ பற்றி எரியும் வாசனையை உணர்ந்து வெளியில் வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் எரிந்து கொண்டிருந்தது. அதனுடன், துணி துவைக்கும் இயந்திரம், சைக்கிள் என்பனவும் தீக்கிரையாகின.

சம்பவம் தொடர்பில் தம்ப லகாமம் பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. பொலிஸார் விசார ணைகளை நடத்தி வருகின்ற னர். (ஐ)

# ஒக்ரோபருக்கு பின் நாட்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்படும்!

## உணவு வீண் விரயத்தை தவிருங்கள் பேராசிரியர் புத்தி மாரம்பே அறிவுரை

கொழும்பு, மே 30

**நாட்டில் தடுக்க முடியாத அளவிற்கு எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்குப் பிறகு பெரும் அரிசி தட்டுப்பாடு ஏற்படும். உணவு வீண்விரயத்தை இயலுமான அளவு தவிர்த்துக்கொள்ள வேண்டும். விவசாய கொள்கையை அரசாங்கம் விரைவாக மாற்றியமைக்க வேண்டும். சிறுபோக பயிர்ச்செய்கை தோல்வி யடைந்தால் முழு நாடும் பாரதூரமான சவால்களை எதிர்க்கொள்ள நேரிடும் என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீட சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மாரபே தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சிறுபோக விவசாய நடவடிக்கைக்கு 80,000 மெற்றிக்தொன் யூரியா மற்றும் 10,000 மெற்றிக் தொன் சுபர் பொசுபேற் அவசியம். அரச உர நிறு வனங்கள் வசமுள்ள வரையறுக்கப்பட்ட இரசா யன உரம் அரச விவசாய காணிகளுக்கு வழங்கப் படுகிறது. தனியார் நிறுவனங்கள் வசம் குறைந்த ளவான உரம் மாத்திரமே கையிருப்பில் உள்ளது.

தவறான உர கொள்கையினால் பெரும்போக பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

விவசாயத் துறை நிபுணர்களின் ஆலோசனைகளையும், எதிர்வு கூறல்களையும் அலட்சியப்படுத்தி அரசியல்வாதிகள் இன்று அமைதி காப்பது வேடிக்கையாகவுள்ளது. விவசாய கொள்கை அரசியலுக்கு அப்பாற் பட்டதாக வகுக்கப்பட வேண்டும் என்பதையே தொடர்ந்து வலியுறுத்துகிறோம்.

நாட்டின் பொருளாதாரம் தீவிரமடைந்துள்ள நிலைமையில் எதிர்வரும் காலங்களில் உணவு தட்டுப்பாட்டையும் எதிர்க்கொள்ள நேரிடும். தடுக்க முடியாத அளவிற்கு எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்திற்கு பிறகு நாட்டில் பெரும் அரிசி தட்டுப்பாடு ஏற்படும். ஆகவே, பொது மக்கள் உணவினை வீண்விரயம் செய்வதை இயலுமான அளவு தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

பெருமளவிலான விவசாயத்திற்கு தான் உரம் அவசியமானது.தற்போதைய நிலைமையில் பெருமளவிலான விவசாயம் தொடர்பில் எம்மால் கருத்து குறிப்பிட முடியாது.ஆகவே பொது மக்கள் தமக்கு தேவையான மரகறிகள், கிழங்கு வகைகள்,உள்ளிட்ட உணவு பொருட் களை உற்பத்தி செய்துகொள்ள வேண்டும். வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க அரசாங்கம் புதிய திட்டங்களை விரைவாக செயல்படுத்த வேண்டும் - என்றார். (ஐ)

# பொதுஜன பெரமுனவின் எம். பி. இந்திய பாதுகாப்பை கோரினார்!

கொழும்பு, மே 30

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முறையான பாதுகாப்பு இதுவரையி லும் வழங்கப்படவில்லை என்பதால், தன்னையும் தன்னுடைய குடும்பத்தி னரையும் இந்தியாவுக்கு அழைத்துச் சென்று, பாதுகாப்பு வழங்குமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியி டம் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்ச ருமான விமலவீர திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமு னவை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான அவர், "பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு தொடர்பில் எனக்கு திருப்தி இல்லை", என்றும் கூறியுள்ளார். (ஐ)

# கல்வி வளர்ச்சிக்கு நிதி சேகரிப்பு; கிளிநொச்சியில் மரதன் ஓட்டம்!




கிளிநொச்சி, மே 30

கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று பிரித்தானியா எடின்பரோ நகரத்தில் நடைபெறும் வடக்கு, கிழக்கு மாகாண மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான நிதி சேகரிப்பு மரதன் ஓட்ட நிகழ்வுக்கு வலுச்சேர்க்கும் முகமாக கிளிநொச்சியி லும் மரதன் ஓட்ட நிகழ்வு இடம்பெற் றது.

பரந்தன் சந்தியில் ஆரம்பமான மரதன் ஓட்டம் பசுமைப்பூங்காவில் நிறைவடைந்தது. ஆண் ,பெண் இரு பாலருக்கும் மரதன் ஓட்டப் போட்டி யில் பங்கேற்றனர். இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்தி ரனும் கலந்து கொண்டிருந்தார்.

அங்கு உரையாற்றிய அவர், "அரசியலுக்கும் மரதனுக்கும் நிறைய தொடர்பு உண்டு என நான் இங்கு கூறுகின்றேன் என்றால், நீண்ட நேரம் நின்று பிடிக்க வேண்டும் மரதன் வாழ்க் கைக்காக பல தத்துவங்களை கொண் டுள்ளது - என்றார். (ஐ)

# வடக்கு, கிழக்கை அழித்தவர்கள் தெற்கையாவது விட்டு வைத்தனரா?

## கேள்வி எழுப்புகிறார் சுரேஷ் பிறேமசந்திரன்

யாழ்ப்பாணம், மே 30

வடக்கு-கிழக்கில் இருந்த தொழிற் சாலைகளை நிர்மூலமாக்கிய ஆட்சியா ளர்கள், தெற்கிலாவது தொழிற்சாலை களை நிர்மாணித்துள்ளார்களா என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்ன ணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந் திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று அவர் விடுத்த விசேட அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு,

தமிழர்களுக்கு எத்தகைய உரிமை களையும் கொடுக்க மாட்டேன் என்று தெரிவித்து அதற்காகவே மக்கள் ஆணையைப் பெற்றுக்கொண்டதாக அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெய வர்த்தன தெரிவித்ததுடன் இன்றளவும் தொடரும் நிறைவேற்று அதிகார ஜனாதி பதி முறைமையையும் தோற்றுவித்தார். இலங்கையின் ஆட்சியாளர்கள் அனை வரும் தமிழின விரோதப் போக்கை முதலீடாக வைத்தே ஆட்சி செய்து வந்துள்ளனர். இதன் பெறுபேற்றை இன்று நாடு அனுபவிக்கிறது.

முப்பதுவருடகால நீண்ட யுத்தத் திற்கு அடித்தளமிட்டு, வடக்கில் மகா வலி அபிவிருத்தி திட்டம் என்ற பெயரில் பொய்யான திட்டத்தை முன்மொழிந்து, சர்வதேச சமூகத்தின் கண்களில் மண்ணைத்தூவி கடன் களைப் பெற்று, ஜெயவர்த்தன ஆரம் பித்த யுத்தத்தை அவருக்குப் பின்வந்த அனைத்து ஜனாதிபதிகளும் பின்பற்றி னர். அனைவருக்கும் ஒரு படி மேலே சென்று மகிந்த ராஜபக்ஷ தமிழர் களுக்கான உரிமைகளைத் தாம் தருவ தற்குத் தயாராக இருப்பதாகவும் அதற் குப் பயங்கரவாதம் தடையாக இருப்ப தாகவும் கூறி சர்வதேச சமூகத்தைப் பிழையாக வழிநடத்தி அளவு கணக் கின்றி கடன்களையும் நிதியுதவிகளையும் ஆயுதங்களையும் பெற்று, 2009இல் முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக் கான தமிழ் மக்கள் கொல்லப்படுவதற் கும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் ஆக்கப்படுவதற்கும் பல பில்லியன் ரூபாய்சொத்திழப்பிற்கும் காரணமாக அமைந்தார்.


வடக்கு - கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கான அதிகாரங்களைத் தமிழ் மக்கள் கேட்டபோது, அதனை குண்டு வீசி அழித்தீர்கள். அங்கிருந்த ஒருசில தொழிற்சாலைகளையும் குண்டுவீசி நிர்மூலமாக்கினீர்கள்.

வடக்கு - கிழக்கில்தான் இந்தகதி என்றால் நீங்கள் காலாதிகாலமாக ஆட்சி செய்யும் தென்பகுதியில் எத்தனை தொழிற்சாலைகளை உருவாக்கியிருக்கி றீர்கள்? அங்கும்கூட இன்று பாணுக்கும் பருப்புக்கும் எரிபொருளுக்கும் எரிவாயு வுக்கும் மக்கள் நாளாந்தம் வரிசையில் நிற்கும் நிலையைத்தானே உருவாக்கியி ருக்கிறீர்கள்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் தேசிய இனப்பிரச்னை தீராமல் நாடு அபிவிருத்தி அடையாது என்று கூறியுள்ளார். அதனை வரவேற் பது போன்று பிரதமர் ரணிலும் புலம்பெயர் உறவுகளின் முதலீட்டை எதிர்பார்த்திருப்பதாகக் கூறுகிறார்.

ஆனால் தமிழர்கள் முன்புபோல் ஏமாறத் தயாரில்லை. இதய சுத்தியுடன் தேசிய இனப்பிரச்னைத் தீர்விற்கான முன்மொழிவுடன் ஆக்கபூர்வமான செயல்திட்டங்களை அரசாங்கம் முன்வைக்குமாக இருந்தால் அனைத்து தமிழ் மக்களும் நாட்டின் அபிவிருத்திக் குப் பங்களிப்புச் செய்வதற்கு தயாரா கவே உள்ளனர் - என்றுள்ளது. (ஐ)

முரளிதரன் காசி விஸ்வநாதன்



# கச்சதீவு விவகாரத்தில் நடந்தது என்ன?

இந்தியாவின் ராமேஸ்வரத்திற்கும் இலங்கையின் நெடுந்தீவிற்கும் இடையில் அமைந்துள்ள மிகச் சிறிய தீவான கச்சதீவை மீட்க வேண்டுமென அடிக்கடி குரல்கள் எழுகின்றன. அந்தத் தீவை இந்தியா தாரைவார்த்துக் கொடுத்ததாகவும் குற்றம்சாட்டப்படுகிறது. உண்மையில் இந்த விவகாரத்தில் நடந்தது என்ன?

இதில் பாக் நீரிணைப் பகுதி என்பது இலங்கையின் வடக்கு கடற்கரைக்கும் இந்தியாவின் தென்கிழக்குக் கடற்கரைக்கும் இடைப்பட்ட பகுதியே பாக் நீரிணை எனப்படுகிறது. 1755லிருந்து 1763வரை சென்னை மாகாணத்தின் ஆளுநராக இருந்த ராபர்ட் பாக்கின் பெயர்தான் இந்த நீரிணைக்குச் சூட்டப்பட்டிருக்கிறது. பாக் நீரிணைப் பகுதியை ஒரு கடல் என்றே சொல்ல முடியாது. பவளப் பாறைகள், மணல் திட்டுகள் அதிகம் இருப்பதால் இந்தப் பகுதியில் பெரிய கப்பல்கள் செல்ல முடியாது.

இந்தியாவின் ராமேஸ்வரத்திலிருந்து 12 மைல் தொலைவிலும் யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவிலிருந்து 10.5 மைல் தொலைவிலும் பாக் நீரிணைப் பகுதியில் அமைந்திருக்கும் ஒரு மிகச் சிறிய தீவுதான் கச்சதீவு. இதன் பரப்பு சுமார் 285 ஏக்கர். இதன் அதிக பட்ச அகலமே 300 மீற்றர்கள்தான். மனிதர்கள் யாரும் வசிக்காத இந்தத் தீவில் புனித அந்தோனியார் தேவாலயம் ஒன்றும் அமைந்திருக்கிறது. ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி - மார்ச் மாதங்களில் இந்தக் கோவிலில் ஒரு வாரத்திற்கு வழிபாடு நடப்பது வழக்கம்.

1983ல் இலங்கையில் இனப் பிரச்னை ஏற்பட்ட பிறகு இந்த வழிபாடு தொடர்ச்சியாக நடப்பது தடைபட்டது. 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ராமநாதபுரத்தைச் சேர்ந்த சீனிக்குப்பன் படையாச்சி என்பவர் இந்த ஆலயத்தைக் கட்டியதாகவும் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த பாதிரியார் ஒருவர் இந்தக் கோவிலில் பூசைவைப்பார் என்றும் கெஸட்டியர் சொல்கிறது. இரண்டாம் உலகப் போர் காலகட்டத்தில் பிரிட்டிஷார் இந்தத் தீவை, வெடிகுண்டுகளை வெடித்துப் பயிற்சி செய்யப் பயன்படுத்தினார்கள்.

## கச்சதீவின் உரிமை யாருக்கு?

ராமநாதபுரம் ராஜாவின் ஜமீன்தாரி உரிமைகளை வைத்தே 1974வரை கச்சதீவு இந்தியாவின் ஒரு பகுதி என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது. ஆனால், இது தொடர்பான எல்லா ஆவணங்களும் புதுதில்லிக்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன. அவை தற்போது ரகசிய ஆவணங்களாகப் பராமரிக்கப்படுகின்றன.

1902ல் இந்தத் தீவை அவருக்கு இந்திய அரசு வழங்கியது. அவருடைய ஜமீனுக்காக அவர் வழங்க வேண்டிய பெஷ்குஷ் (குத்தகைத் தொகை) இந்தத் தீவையும் உள்ளிட்டே கணக்கிடப் பட்டது. இந்தத் தீவைச் சுற்றி மீன் பிடிக்கும் உரிமை, தீவில் மேய்ச்சல் உரிமை, வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தப்படும் உரிமை ஆகியவற்றை ராமநாதபுரம் ராஜா குத்தகைக்கு விட்டிருந்தார்.

இதற்கு முன்பாகவே 1880 ஜூலையில் முகமது அப்துல்காதர் மரைக்காயர் என்பவரும் முத்துச்சாமிப் பிள்ளை என்பவரும் ராமநாதபுரம் மாவட்ட துணை ஆட்சியர் எட்வர்ட் டர்னர் பெயரில் ஒரு குத்தகைப் பத்திரத்தைப் பதிவு செய்தார். சாயம் தயாரிப்பதற்காக 70 கிராமங்களிலும் 11 தீவுகளிலும் வேர்களைச் சேகரிக்க இந்த குத்தகை உரிமை வழங்கியது. அந்த 11 தீவுகளில் கச்சதீவும் ஒன்று. 1885ல் இதே மாதிரியான இன்னொரு குத்தகைப் பத்திரம் கையெழுத்தானது.

1913ல் ராமநாதபுரம் ராஜாவுக்கும் இந்தியவுக்கான வெளியுறவுத் துறை அமைச்சருக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தக் குத்தகைப் பட்டியலிலும் கச்சதீவின் பெயர் இடம்பெற்றி ருந்தது. அதாவது, இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளையும் ஆட்சி செய்த பிரிட்டிஷ் அரசு கச்சதீவை இந்தியாவின் ஒரு பகுதியாக அங்கீகரித்ததே தவிர, இலங்கையின் ஒரு பகு தியாகக் கருதவில்லை.

1948 செபரெம்பர் ஏழாம் திகதி மெட்ராஸ் எஸ்டேட் (அபாலி ஷன் அண்ட் கன்வர்ஷன் இன்டு ரயத்வாரி) சட்டத்தின் கீழ் சென்னை மாகாணத்தில் ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டபோது கச்சதீவு சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியானது.

1972ல் தமிழ்நாடு அரசால் பதிப்பிக்கப்பட்ட ராமநாதபுரம் மாவட்ட கெஸட்டியர், கச்சதீவை ராமநாதபுரம் மாவட்டத்தின் ஒரு பகுதியாகக் காட்டுகிறது. கச்சதீவின் சர்வே எண் 1250. இருந்தபோதும், கச்சதீவு ஒரு சர்ச்சைக்குரிய பகுதி என்ற வகையிலேயே அந்த விவகாரத்தை அணுகியது இலங்கை அரசு.

## பிரச்னை துவங்கியது எப்போது?


கச்சதீவு யாருக்குச் சொந்தம் என்ற பிரச்னை 1920களிலேயே துவங்கிவிட்டது. பாக் நீரிணை - மன்னார் வளைகுடா பகுதிகளில் எல்லையை வரையறுப்பதற்காக 1921 ஒக்ரோபர் 24ம் திகதி கொழும்பு நகரில் சென்னை மாகாண அதிகாரிகளுக்கும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சு வார்த்தை நடைபெற்றது.

அந்தக் கட்டத்தில் இலங்கை சார்பாக கலந்துகொண்ட சுங்க வரிக்கான முதன்மை கலெக்டர் ஹார்ஸ்பர்க், கச்சதீவு இலங்கைக்கு வரும்படி எல்லையை வகுக்க வேண்டும். இல்லாவிட்டால் மாநாட்டை நிறுத்திவிடலாம் என்று சொன்னார். இதை ஏற்காத இந்தியக் குழு, வேண்டுமானால் அந்தப் பகுதியின்

## இந்தியாவால் மீட்க முடியுமா?

மீன்பிடி உரிமையை மட்டும் தருவதாகச் சொன்னது. ஒப்பந்தமும் கையெழுத்தானது. ஆனால், இந்த ஒப்பந்தத்தை காலனி அலுவலகம் ஏற்கவில்லை. ஆகவே சட்ட ரீதியாக இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கே வரவில்லை.

இந்திய சுதந்திரத்திற்குப் பிறகும் இந்தப் பிரச்னை அவ்வப்போது எழுப்பப்பட்டது. இருந்தபோதும் இந்திய அரசு இந்த விவகாரத்தில் பெரிதாக ஆர்வம் காட்ட வில்லை. 1967ல் தி.மு.க. பெரும் எண்ணிக்கையில் நாடாளுமன்ற உறுப்பி னர்களை மக்களவைக்கு அனுப்பியது. இதற்குப் பிறகு பெரிய அளவில் இந்த விவகாரம் அவை யில் எழுப்பப்பட்டது. அப்போதெல்லாம் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி, ஜனசங்கம் ஆகியவை தி.மு.கவுக்கு ஆதரவளித்தன. 1968 மார்ச்சில், ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் தமிழ்நாடு சட்டப் பேரவையில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியால் கொண்டு வரப்பட்டது. ஆனால், இந்த காலகட்டத்தில், இந்த விவகாரத்தைக் கண்டு கொள்வதில்லை என்ற போக்கையே கடைப்பிடித்தது மத்திய அரசு.



1969ல் லண்டனில் காமன்வெல்த் மாநாடு நடந்தபோது, இலங்கைப் பிரதமர் டட்லி சேனநாயகவும் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியும் நிலைமை மோசமாகும் வகையில் எதையும் செய்வதில்லை என ஒப்புக் கொண்டனர். மேலும், புனித அந்தோனியார் திருவிழாவின் போது, சாதாரண உடையணிந்த காவலர்களே அங்கு நிறுத்தப்படுவார்கள் என்பதையும் இருதரப்பும் ஏற்றுக்கொண்டனர்.

ராமநாதபுரம் ஜமீனின் ஆவணங்களைக் காட்டி தி.மு.க. அரசு கச்சதீவு இந்தியாவுக்கே சொந்தம் என்று கூறினாலும் மத்திய அரசு அதனை ஏற்கவில்லை. ஒருகட்டத்தில், அந்தத் தீவின் மீதான வரலாற்று உரிமை இந்தியாவிடம் இருந்ததா என ஆராயும் படி இந்திரா காந்தி தெரிவித்தார். ஒவ்வொரு தரப்பும் ஒவ்வொரு கருத்தை முன்வைத்தனர். 1973வாக்கில் கச்சதீவு மீதான உரிமையை இந்தியா விட்டுவிட முடிவுசெய்ததுபோலத் தெரிந்தது.

இதையடுத்து, தனது சட்ட அமைச்சரான செ. மாதவனுடன் இந்திரா காந்தியைச் சந்தித்த முதலமைச்சர் மு. கருணாநிதி கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தார். இந்த விவகாரத்தில் தனது நிலைப்பாட்டை எழுத்து பூர்வமாகவும் பிரதமரிடம் அளித்தார் மு. கருணாநிதி. மாநில அரசு சேகரித்த ஆதாரங்களின்படி, “கச்சதீவின் மீது இலங்கை அரசானது ஒரு போதும் இறையாண்மை செலுத்தியதில்லை என்பதைச் சுட்டிக்காட்ட போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. அநாதி காலம் தொட்டே தமிழ்நாடு கடற்கரையில் முத்து, சங்கு எடுக்கும் உரிமை ராமநாதபுரம் ராஜா உள்ளிட்ட தென்னிந்திய ஆட்சியாளர்களுக்கே உரியதாக இருக்கிறது என வரலாற்று ஆவணங்கள் சுட்டிக்காட்டுகின்றன. ராமநாதபுரம் ராஜா இலங்கை அரசுக்கு எந்தக் காலத்திலும் வாடகையோ, ராயல்டியோ செலுத்தியதில்லை” என முதலமைச்சர் மு. கருணாநிதி தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

1970களில் இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்திக்கும் இலங்கையின் பிரதமரான சிறிமாவோ பண்டாரநாயகவுக்கும் நல்ல நட்புறவு இருந்தது. “கச்சதீவு தொடர்பான பேச்சுவார்த்தை ஒரு கட்டத்தில் முறிந்துபோனது. அந்தத் தீவின் மீது இந்தியாவுக்கு இருக்கும் உரிமையை விட்டுத்தர வேண்டாம் என்று இந்திய அதிகாரிகளின் குழு பிரதமர் இந்திரா காந்தியிடம் வலியுறுத்தியது. உடனே சிறிமாவோ இந்திரா காந்தியைத் தொடர்பு கொண்டு, தனக்கு உதவும்படி கோரினார். இல்லாவிட்டால் தனக்கு அரசியல் எதிர்காலமே இல்லாமல் போய்விடும் என்று சொன்னார். சிறிமாவோவின் சிக்கலான சூழ்நிலையைப் புரிந்து கொண்டார் இந்திரா காந்தி. இந்திய அதிகாரிகள் ஏதும் சொல்வதற்கு முன்பாகவே ஒப்பந்தத்தை முடிவுசெய்யும் வகையில் அதில் தலையிட்டார்” என இந்த ஒப்பந்தத்தின் பின்னணி குறித்து Ethnicity Versus Nationalism: The Devolution Discourse in Sri Lanka நூலில் குறிப்பிடுகிறார் பார்த்தா கோஷ்.

இந்தப் பின்னணியில்தான், 1974 ஜூன் 28ஆம் திகதி இந்திய அரசும் இலங்கை அரசும் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. அதன்படி, இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைக் கோடு வரையறுக்கப்பட்டது. கச்சதீவு இலங்கைக் குச் செல்லும்படி இந்தக் கோடு வரையறுத்தது. இருந்தபோதும், அங்கே மீன் பிடிக்கும் உரிமையும் யாத்ரீகர்கள் அந்தத் தீவுக்கு விசா இன்றி செல்லும் உரிமையும் பாதுகாக்கப்பட்டிருந்தன.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# குருவுக்கு பதில் சிஷ்யன்:

# 2024 தேர்தலில் காங்கிரஸுக்கு பணியாற்றும் சுனில்: யார் அவர்?

**2024**-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியில் இணைந்து பணியாற்றம் வாய்ப்பை நிராகரித்து விட்டதாக பிரசாந்த் கிஷோர் அறிவித்த நிலையில் தற்போது அந்த பொறுப்பை அவரது சிஷ்யனாக கருதப்படும் சுனில் கனுகோலு ஏற்கவுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் மாநாடு, ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் மே 13, 14, 15 ஆகிய திகதிகளில் நடைபெற்றது. இதில் 2024-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக கட்சியில் செய்ய வேண்டிய மாற்றங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.



இதனைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியில் பல்வேறு மாற்றங்கள் செய்து கட்சியின் தலைவர் சோனியா காந்தி இன்று அறிவிப்பு வெளியிட்டுள்ளார். காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தலைமையில் அரசியல் விவகாரக் குழு, பணிக்குழு 2024 மற்றும் மத்திய திட்டமிடல் குழு ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது.

அரசியல் விவகாரக் குழுவில் ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன் கார்கே, குலாம் நபி ஆசாத், அம்பிகா சோனி, திக்விஜய சிங், ஆனந்த் சர்மா, கே.சி.வேணுகோபால் மற்றும் ஜிதேந்திர சிங் ஆகிய 8 முக்கிய தலைவர்கள் இடம் பெற்றுள்ளனர்.

பணிக்குழு 2024-ல் சிதம்பரம், பிரியங்கா காந்தி வத்ரா, கே.சி.வேணுகோபால், ரன்தீப் சுர்ஜேவாலா, முகுல் வாஸ்னிக், ஜெய்ராம் ரமேஷ், அஜய் மக்கன் மற்றும் சுனில் கனுகோலு ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இதில் சுனில் கனுகோலு பிரசாந்த் கிஷோரின் ஐபேக் நிறுவனத்தில் பணியாற்றியவர் ஆவார். அதன் பிறகு தனியாக பிரிந்து தனியாக ஒரு நிறுவனத்தை தொடங்கி அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆலோசகராக பணியாற்றி வருகிறார்.

### பாஜக, காங்கிரஸுக்கு பணி

சுனில் கனுகோலு, வயது 40, வரும் மக்களவைத் தேர்தலுக்கு மட்டுமின்றி முன்னதாக வரும் சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் காங்கிரஸ் கட்சியை வழிநடத்துவார் எனத் தெரிகிறது.

2017-ம் உத்தரபிரதேச சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜகவுக்கு பணியாற்றினார் சுனில். ஆனால் அண்மையில் நடந்து முடிந்த உ.பி. சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு சுனில் வேலை செய்தார். இதற்கு முன்னதாக தேர்தல் வியூகவாதி பிரசாந்த் கிஷோர், கனுகோலு வழிகாட்டியாக இருந்து அவரை நரேந்திர மோடியின் 2014 பிரச்சாரத்தை நிர்வகிக்கும் குழுவில் அங்கம் வகித்தார்.

பிரசாந்த் கிஷோரும் சுனிலும் ஒரு காலத்தில் அமெரிக்காவில் வெவ்வேறு இடங்களில் பணி செய்தவர்கள். அப்போது இருவருக்கும் இடையே நல்ல புரிதல் இருந்தது. ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து அளிக்கும் உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்த திட்டம் ஒன்றில் பணியாற்றுவதற்காக கடந்த 2011-ல் குஜராத்துக்கு வந்தார் பிரசாந்த் கிஷோர்.

அப்போது முதல்வராக இருந்த மோடியுடன் தனக்கான நெருக்கத்தை அதிகப்படுத்திக் கொண்ட கிஷோர், 2012 குஜராத் தேர்தலில் மோடியின் வெற்றிக்கு வியூக வகுப்பாளராக களத்தில் இறங்கினார். அதன் தொடர்ச்சியாக 2014-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் பாஜகவுக்கு பணியாற்றியனார் பிரசாந்த் கிஷோர். அந்த நேரத்தில் கிஷோரின் அணியில் அவருக்கு கீழே இருந்தவர்தான் சுனில் கனுகோலு.

### கிஷோரிடம் இருந்து பிரிந்த சுனில்

மோடிக்கு வகுத்துக் கொடுத்த தேர்தல் வியூகம் வெற்றி பெற்றதும், பிஹாரில் நிதிஷ்குமார், பஞ்சாபில் அம்ரீந்தர் சிங், டெல்லியில் அர்விந்த் கேஜ்ரிவால், ஆந்திராவில் ஜெகன்மோகன் ரெட்டி என அடுத்தடுத்து வெற்றி வியூகங்களை வகுத்துக் கொடுத்து அனைவராலும் கவனிக்கப்படும் நபராக பிரசாந்த் கிஷோர் மாறினார்.

ஆனால் 2015-ல் கிஷோருடன் ஏற்பட்ட கருத்துமோதல் காரணமாக 'ஐ - பேக்' நிறுவனத்தில் இருந்து வெளியேறினார் சுனில். 2016 சட்டப்பேரவைத் தேர்தலில் ஸ்டாலினுக்கான வெற்றி வியூகத்தை வகுக்கும் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டார் சுனில். அந்தத் தேர்தலில் ஸ்டாலின் வெற்றி பெறாவிட்டாலும் சுனிலை திமுக கைவிடவில்லை. 2019 நாடாளுமன்றத் தேர்தலிலும் திமுக வெற்றிக்காக வேலை செய்தார் சுனில்.

அதேசமயம் 2021-ம் ஆண்டு தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பிரசாந்த் கிஷோரின் 'ஐ-பேக்' கம்பெனி திமுகவுக்காக பணியாற்றியது. முந்தைய தேர்தல்களில் திமுகவுக்காக பணியாற்றிய சுனில் இந்தமுறை அதிமுக அணிக்காக பணியாற்றினார்.

### பிரசாந்த் கிஷோருக்கு பதில்

முன்னதாக காங்கிரஸில் செய்ய வேண்டிய மாற்றங்கள் தொடர்பாக பல்வேறு பரிந்துரைகளை பிரசாந்த் கிஷோர் வழங்கி இருந்தார். இதனால் பிரசாந்த் கிஷோர் காங்கிரஸில் இணையக்கூடும் என மீண்டும் தகவல்கள் வெளியாகின.

இதுதொடர்பாக கட்சியின் மூத்த தலைவர்களுடன் சோனியா காந்தி தீவிர ஆலோசனை நடத்தினார். அப்போது காங்கிரஸ் கட்சிக்கு புத்துயிர் அளிப்பதற்கான வரைவு திட்டத்தை பிரசாந்த் கிஷோர் அளித்தார். அவருடன் சேர்ந்து காங்கிரஸ் மூத்த தலைவர்களுடன் சோனியா காந்தி விவாதித்தார்.

ஆனால் பிரசாந்த் கிஷோரின் ஐபேக் நிறுவனம் தெலங்கானா ராஷ்ட்ர சமதி கட்சிக்கு தேர்தல் பணியாற்ற திடீர் என ஒப்பந்தம் செய்தது. இந்த விவகாரம் காங்கிரஸ் கட்சியில் புயலை கிளப்பியது. இதனையடுத்து காங்கிரஸ் கட்சியில் இணைந்து பணியாற்றும் வாய்ப்பை நிராகரித்து விட்டதாக பிரஷாந்த் கிஷோர் தெரிவித்தார்.

இந்த பரபரப்பான சூழலில் பிரசாந்த் கிஷோர் வழங்க வேண்டிய பொறுப்பை சுனிலுக்கு காங்கிரஸ் தலைமை வழங்கியுள்ளது. அதாவது பிரசாந்த் கிஷோர் அளித்த மறுசீரமைப்பு திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பு அவரது சிஷ்யனாக கருதப்படும் சுனிலுக்கு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கச்சதீவு விவகாரத்தில்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்திய மக்களவையில் இது தொடர்பாக விளக்கமளித்த அப்போதைய வெளியுறவுத் துறை அமைச்சர் ஸ்வரண் சிங், “இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டிருப்பதன் மூலம் கடந்த காலத்தில் இரு தரப்பினரும் அனுபவித்தது போலவே மீன் பிடிக்கும் உரிமை, கப்பல்களைச் செலுத்தும் உரிமை, யாத்திரை செல்லும் உரிமை ஆகியவை எதிர்காலத்திலும் தொடரும்” என்று குறிப்பிட்டார்.

இந்த ஒப்பந்தத்தின் ஐந்தாவது பிரிவு இதைப் பற்றி விளக்கமாகக் கூறுகிறது. “இதுவரை இருந்ததைப் போலவே இந்திய மீனவர்களும் யாத்ரீகர்களும் கச்சதீவுக்கு வந்துபோக முடியும். இதற்காகப் பயண ஆவணங்களையோ விசாவையோ இலங்கை கேட்காது” என்கிறது அந்தப் பிரிவு. இருந்தபோதும் அதில் மீன் பிடி உரிமைகள் குறித்து சொல்லப்படவில்லை. இது குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பப்பட்டபோது, அந்த பாரம்பரிய உரிமை மாறாது என்று பதிலளித்தார் ஸ்வரண் சிங்.

இந்த ஒப்பந்தத்திற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தார் முதலமைச்சர் மு. கருணாநிதி. இந்த கடல்சார் ஒப்பந்தம் மாநில அரசின் உரிமைகளை கடுமையாக பாதித்தாலும் அந்த ஒப்பநத்தத்தின் ஷரத்துகளை மாநில அரசுடன் மத்திய அரசு விவாதிக்கக்கூட முன்வரவில்லை என்று குறிப்பிட்டார் மு. கருணாநிதி. பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருந்த காலத்திலும் பிரதமரையும் வெளியுறவுத் துறை அமைச்சக அதிகாரிகளையும் சந்தித்த அவர், கச்சதீவு இந்தியாவுக்கு சொந்தமானது அதனை இலங்கைக்குக் கொடுக்கக்கூடாது என்று வாதிட்டார். அதை மீறி ஒப்பந்தம் கையெழுத்தான நிலையில், 1974 ஜூன் 29ஆம் திகதி அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்பட்டது. அதன்படி ஆகஸ்ட் 21ஆம் திகதி தமிழ்நாடு சட்டமன்றத்தில் இந்த விவாகரம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஒப்பந்தத்தின் ஷரத்துகளை மறுபரிசீலனை செய்யும்படி மத்திய அரசிடம் கேட்டார் மு. கருணாநிதி.

இந்த நிலையில், 1976ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இரண்டாவது ஒப்பந்தம் இது தொடர்பாக கையெழுத்தானது. அதன்படி, “இந்திய மீனவர்களும் அவர்களது மீன் பிடிப் படகுகளும் இலங்கைக் கடல் பகுதியிலும் இலங்கையின் பிரத்யேக பொருளாதார மண்டலப் பகுதியிலும் இலங்கையின் அனுமதியில்லாமல் மீன்டிபிடிக்க மாட்டார்கள்” என்று கூறியது இந்த ஒப்பந்தத்தின் ஷரத்து. நெருக்கடி நிலை காலகட்டத்தில் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட நிலையில், இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

### தீர்வு என்ன?

1974 மற்றும் 1976ஆம் ஆண்டு ஒப்பந்தங்களின்படி கச்சதீவு முழுமையாக இலங்கைக்கு அளிக்கப்பட்டுவிட்ட நிலையில், அந்தப் பகுதியில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துவது, மீனவர்களைக் கைதுசெய்து, படகுகளைப் பறிமுதல் செய்வது ஆகியவை தமிழ்நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

இந்த விவகாரத்திற்கு சில தீர்வுகள் முன்வைக்கப்படுகின்றன.


முதலாவது: கச்சதீவையும் அதனைச் சுற்றியுள்ள கடற் பகுதிகளையும் இந்தியா இலங்கையிடமிருந்து நீண்ட கால குத்தகைக்கு எடுப்பது. இதற்கு உதாரணமாக தீன் பிகா விவகாரம் சுட்டிக்காட்டப்படுகிறது. தீன் பிகாவின் மீதான இறையாண்மை உரிமை இந்தியாவிடம் இருக்கிறது. ஆனால் நீண்ட காலக் குத்தகையின் கீழ் அந்தப் பகுதியை வங்க தேச மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.


இரண்டாவதாக, இந்திய மீனவர்களுக்கு உரிமம் அளித்து கச்சதீவு பகுதியில் மீன் பிடிக்க அனுமதிப்பது. 1974, 76ஆம் ஆண்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தான நிலையிலும்கூட, கச்சதீவு மற்றும் அதனை ஒட்டிய கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் மீன் பிடித்துவரும் நிலையில், இம்மாதிரி ஒரு உரிமத்தை வழங்குவது அந்தப் பகுதியில் மீன் பிடித்தல் தொடர்பாக எழுப்பப்படும் சிக்கல்களுக்கு ஒரு தீர்வாக அமையும்.

# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?




1) 2) 3)


38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?




1) 2) 3)

39. 3  4  3 = 15 இங்கு  ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..............................

ii) “நவீன” என்பதன் எதிர்க்கருத்து யாது? ..............................

iii) அ∴றிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..............................

iv) “எழில்” என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..............................

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..............................

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..............................

(6 புள்ளிகள்)

**02)** அ∴றிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..............................

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1** **38. 2** **39. 1** **40. 2**

**01.** 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) × 2) ✓ 3) × 4) ×

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

---

**கல்வி tv CHANNEL-1**

**30.05.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

**கல்வி tv CHANNEL - 2**

**30.05.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |




# சீனத் தூதுவர் அம்பாறை விஜயம்
## 2500 உலருணவு பொதிகள் அன்பளிப்பு

அக்கரைப்பற்று, மே 30

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் அம்பாறை மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்தார். அவரை அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் வரவேற்று கலந்துரையாடினார்.

இதன்போது, நெருக்கடி நிலையில் சிரமப்படும் மக்களுக்கு உதவும் நோக்கில் 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 2,500 உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

சம்பிரதாயபூர்வமாக 100 பயனாளிகளுக்கு சீனத் தூதுவரும் அவரின் பாரியாரும் உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

"இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நல்லுறவு தொடரும் என்றும் எமது முதல் கட்ட உதவி இது. எதிர்காலத்தில் இன்னும் பல உதவிகளை நாட்டுக்கு செய்ய இருக்கிறோம்" என்று சீன தூதுவர் அங்கு கூறியிருந்தார்.

அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் சீன தூதுவருக்கு நன்றி தெரிவித்து "மேலும் இந்த உதவிகளை அம்பாறை மாவட்டத்துக்கு வழங்க வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார். (ஐ)

# கள்வர்களுக்கு எதிர்காலத்தில் மட்டு. மக்கள் இடமளிக்கக்கூடாது!

சாணக்கியன் எம். பி.

மட்டக்களப்பு, மே 30

**மட்டக்களப்பு மக்கள், நாட்டிலுள்ள கள்வர்களுக்கும் மாவட்டத்திலுள்ள கள்வர்களுக்கும் எதிர்காலத்தில் இடமளிக்கக்கூடாது என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு கருப்பங்கேணி எவர் கிறீன் விளையாட்டுக்கழகத்தின் விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "இன்று மக்கள் தமது அன்றாட தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு வரிசையில் நிற்கும் நிலையே உள்ளது. இன்று சில பொருட்களை காசு கொடுத்து வாங்க முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

ஓகஸ்ட் மாதமளவில் பாரிய பஞ்சம் ஏற்படும் என்று புதிய பிரதமர் கூறியுள்ளார். அடுத்த மூன்று மாதங்களில் மக்கள் வாழ்நாளில் காணாத துன்பங்களை அனுபவிக்கபோகின்றனர் என்று அமைச்சர்கள் சொல்கின்றார்கள். இதனை சொல்வதற்கு அமைச்சர்கள் இந்த நாட்டுக்கு தேவையா? இதனை சொல்வதற்கு ஒரு பிரதமர் தேவையா? தற்போதைய நிலைக்கு காரணம் தற்போதைய ஜனாதிபதி என்பது அனைவருக்கும் தெரியும்.

அதனால்தான் கோட்டா வேண்டாம் என்ற போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. எவ்வளவு கூறியும் வெட்கம், மானம், ரோசம் அற்றவர் அப்படியே பதவி விலகாமல் இருக்கின்றார். இன்று இந்த மக்கள் படும் அவலங்களுக்கு கோட்டாபயவுடன் இணைந்து இந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு இலட்சம் மக்களும் இந்த அவலங்களுக்கு பொறுப்பு கூறவேண்டும்.

ஜனாதிபதி எடுத்த ஒவ்வொரு தீர்மானமும் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது. அதற்கு இங்கு ஒரு இலட்சம் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு வழங்கினார்கள்.

இதேபோன்று ஜனாதிபதியால் பெரிய முதலாளிகளுக்கு வரி சலுகைகள் வழங்கப்பட்டன. அதனால் அந்த சுமையை மக்கள் சுமக்கும் நிலையேற்பட்டது - என்றும் சொன்னார். (ஐ)

# கிண்ணியா பிரதேச செயலகத்தில் சுழற்சிமுறையில் 5 நாட்களும் பணி!

கிண்ணியா, மே 30

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைவாக, கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு ஊழியர்களை சுழற்சி முறையில் சேவைக்கு அழைத்திருப்பதாக கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். எம். கனி தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து அவர், நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், "இதன்படி, திங்கட்கிழமைகளில் அனைத்து ஊழியர்களும் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அலுவலர்களை சந்தித்து தமது பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு பொது மக்கள் திங்கட்கிழமையையே பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஏனைய நாட்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே ஊழியர்கள் சமுகமளிப்பர்.

"இதேவேளை, பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள், மோட்டார் வாகன அனுமதி பத்திரங்கள், சமுர்த்தி கொடுப்பனவு போன்ற அத்தியாவசிய சேவைகள் வாரத்தில் ஐந்து நாட்களும் நடைபெறும்" என்றார்.

இதேவேளை, தமிழக அரசு வழங்கிய நிவாரணம் தொடர்பில் கருத்துரைக்கையில், "இந்திய அரசாங்கம் வழங்கிய நிவாரணப் பொருட்களில் 4,125 கிலோகிராம் அரிசியும் 300 பால்மா பக்கெற்றுக்களும் கிண்ணியா பிரதேசத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

"குறைந்த வருமானமுடைய குடும்பங்களை தெரிவுசெய்து, அவர்களுக்கு தலா 10 கிலோகிராம் அரிசியை வழங்க உத்தேசித்துள்ளோம். அத்தோடு, போஷாக்கு குறைவான குடும்பங்களில் உள்ள பிள்ளைகளுக்கும் போஷாக்கு குறைவான கர்ப்பவதி தாய்மார்களுக்கும் கிடைக்கப்பெற்ற பால்மா பக்கெற்றுக்களை பகிர்ந்தளிக்க தீர்மானித்துள்ளோம்" என்றார். (ஐ)

# சஹ்ரானின் மனைவி ஹாதியாவுக்கு ஆவணங்கள் தமிழில் வழங்கப்பட்டன

கல்முனை, மே 30

உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலை தாக்குதல்களின் பிரதான குண்டுதாரியான சஹ்ரான் ஹாசிமின் மனைவிக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சட்ட மா அதிபர் தாக்கல் செய்துள்ள குற்றப் பத்திரிகை தொடர்பிலான இணைப்பு ஆவணங்கள் அனைத்தும் தமிழ் மொழியில் அவருக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

இது குறித்த வழக்கு கல்முனை மேல் நீதிமன்ற நீதிவான் ஜயராம் ட்ரொக்ஸி முன்னிலையில் விசாரணைக்கு வந்த போதே இவ்வாறு அவை கையளிக்கப்பட்டன.

கடந்த தவணையின்போது சஹ்ரானின் மனைவி சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி, பிரதிவாதிக்கு எதிரான சான்றாக முன்வைக்கப்படும் அவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சிங்கள மொழியில் உள்ளதால், அதன் தமிழ் மொழிபெயர்ப்பு அவசியம் என நீதிமன்றில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதற்கமைய குற்றப்பத்திரத்தின் இணைப்பு ஆவணங்கள் சிங்கள மொழியில் காணப்படுவதால் அவை தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்படல் வேண்டும் எனவும் அப்போதே பிரதிவாதிக்கு தன் பக்க நியாயங்களை முன்வைக்க முடியுமாக இருக்கும் எனவும் ஹாதியாவின் சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

இதன்படி கடந்த தவணையில் நீதிமன்றம் விடுத்த உத்தரவுக்கு அமைய பிரதிவாதியான சஹ்ரானின் மனைவிக்கு எதிரான குற்றப்பத்திரத்தின் இணைப்புகளின் தமிழ் மொழி பெயர்ப்பு வழக்கு விசாரணையின்போது அரச சட்ட வாதி மாதினி விக்னேஸ்வரனால் பிரதிவாதி தரப்பு சட்டத்தரணியிடம் கையளிக்கப்பட்டது.

மீண்டும் நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸினால் எதிர்வரும் ஜூலை 21 திகதிக்கு குறித்த வழக்கு மறுதவணை இடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது சஹ்ரான் ஹாசிமின் மனைவி அப்துல் காதர் பாத்திமா ஹாதியா பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருந்தனர். (ஐ-1)

# சிறுமி துஷ்பிரயோகம்; பூசகருக்கு விளக்கமறியல்!

கல்முனை, மே 30

சிறுமியை காதலிப்பதாகக் கூறி அவரைக் கர்ப்பமாக்கிய பூசகரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. அத்துடன், இந்த செயலுக்கு உடந்தையாக இருந்த பூசகரின் தாய் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அம்பாறை - பெரியநீலாவணை பொலிஸ் பிரிவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறுமியின் தந்தை கடந்த 26ஆம் திகதி வழங்கிய பொலிஸ் முறைப்பாட்டுக்கு அமைய நடத்தப்பட்ட விசாரணையில் அந்தப் பகுதியை சேர்ந்த குற்றம்சாட்டப்பட்ட நபரான பூசகர் கைது செய்யப்பட்டார்.

இவர் நேற்று முன்தினம் கல்முனை நீதிவான் நீதிமன்றில் பூசகர் முற்படுத்தப்பட்டார். விசாரணையை நடத்திய நீதிவான் அவரை 14 நாட்கள் மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

அத்துடன், இந்த செயலுக்கு உடந்தையாக இருந்தார் என்று கூறப்படும் பூசகரின் தாயாரை 5 இலட்சம் ரூபாய் பிணையில் செல்லவும் அனுமதியளித்தார்.

சிறுமி வசிக்கும் பகுதியில் ஆலயம் ஒன்றில் பூசகராக பணியாற்றும் சந்தேகநபர் 15 வயது சிறுமியை காதலிப்பதாகக் கூறி தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று குடும்பம் நடத்தியுள்ளார். சிறுமியின் தாயார் மத்திய கிழக்கு நாடொன்றில் பணிக்கு சென்றுள்ளார். தந்தை ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார். இதனால், சிறுமியின் தனிமையை பயன்படுத்தி அவரை சந்தேக நபர் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று விசாரணைகளிலிருந்து அறிய வருகின்றது. (ஐ-1)

# தேவாபுரம் வாசிகசாலைக்கு புத்தகங்கள் அன்பளிப்பு!

மட்டக்களப்பு, மே 30

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வாலிபர் முன்னணியால் முறக்கொட்டாஞ்சேனை தேவாபுரம் வாசிகசாலைக்கு புத்தகங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசனிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியால் 300 புத்தகங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட வாலிபர் முன்னணி தலைவர் லோ. தீபாகரன் தலைமையில் நடைபெற்ற புத்தகங்கள் கையளிக்கும் நிகழ்வில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன், வட, கிழக்கு வாலிபர் முன்னணி தலைவர் சேயோன் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். (ஐ)

# உணவு வழங்கலில் நெரிசல்; நைஜீரியாவில் 31 பேர் மரணம்!

நைகர், மே 30

நைஜீரியா - தெற்கில் ஏழை உள்ளூர் மக்களுக்கான இலவச உணவு விநியோகத்தின்போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி கர்ப்பவதி பெண் மற்றும் சிறுவர்கள் உட்பட குறைந்தது 31 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் ஏழை மக்களுக்கு உணவு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதை அடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் கூடினர். இலவச உணவு மற்றும் பொருட்களைப் பெற பெருந்தொகையான மக்கள் முண்டியடித்து ஒரேயடியாக மண்டபத்துக்குள் நுழைய முயன்றபோது பெரும் நெரிசல் ஏற்பட்டது. இதில் சிக்கி 31 பேர் இறந்தனர்.

இதனையடுத்து உதவி வழங்கும் நிகழ்வை ஏற்பாடு செய்த தேவாலய சட்ட ஆலோசகர் மற்றும் நிகழ்ச்சி அமைப்பாளர் உட்பட தேவாலய நிர்வாகத்தைச் சேர்ந்த பலர் நைஜீரிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.



உணவு விநியோகத்தின் போது காயமடைந்தவர்கள் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)



## பலம் வாய்ந்த ஆயுதங்கள் உக்ரைனுக்கு கிடைத்தன!

### பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

கீவ், மே 30

டென்மார்க்கிலிருந்து அமெரிக்க தயாரிப்பான கப்பல் எதிர்ப்பு ஹார்பூன் ஏவுகணைகளையும் அமெரிக்காவிடம் இருந்து ஹோவிட்சர்கள் என்று அழைக்கப்படும் பீரங்கிகளையும் பெறத் தொடங்கியுள்ளதாக உக்ரைன் பாதுகாப்பு அமைச்சர் ஒலெக்ஸி ரெஸ்னிகோவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவை எதிர்த்துப் போராடும் உக்ரைன் படைகளை இந்த ஆயுதங்கள் மேலும் வலுப்படுத்தும். தெற்கு துறைமுகமான ஒடேசா உட்பட நாட்டின் கடற்கரையை பாதுகாப்பதில் உக்ரைன் படைகளுக்கு ஹார்பூன் ஏவுகணை பேருதவியாக இருக்கும் எனவும் அவர் கூறினார்.

பெப்ரவரி 24 உக்ரைன்மீது ரஷ்யா படையெடுத்ததை அடுத்து அந்த நாட்டின் முக்கிய துறைமுகங்கள் முடக்கப்பட்டுள்ளன. இதனால் உக்ரைனில் இருந்து தானியங்கள் உள்ளிட்ட ஏற்றுமதிகள் முடங்கியுள்ளன. இந்நிலையில் உக்ரைன் துறைமுகங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த ஹார்பூன் ஏவுகணைகள் உதவும் என உக்ரைன் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராணுவத்தில் 1977ல் சேர்க்கப்பட்ட ஹார்பூன் ஏவுகணை, எத்தகைய தட்ப வெப்பத்திலும், மிகக் குறைந்த உயரத்தில் பறந்து சென்று கப்பலை தாக்கி அழிக்கும் திறன் உடையது.

இது போர்க் கப்பல்களில் உள்ள ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகளை கடந்து தாக்கும் திறன் கொண்டதுடன், கடல்மட்டத்தை ஒட்டிப் பறக்கவும் வல்லது. போர் விமானங்கள்,போர்க் கப்பல்கள் , நீர்மூழ்கிகள் மற்றும் கடற்கரையோர தளங்களில் இருந்து இந்த ஏவுகணையை ஏவ முடியும். ஏவப்படும் இடத்தைப் பொறுத்து 280 கி.மீற்றர் தூரம் வரை சென்று இந்த ஏவுகணை இலக்கைத் தாக்கும். 221கிலோ வெடிபொருட்களைத் தாங்கிச் சென்று ஒரு பெரிய போர்க் கப்பலைகூட தகர்க்கும் வலுவுடையது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## பிரேசிலில் வெள்ளம்; 35 பேர் உயிரிழப்பு!

பிரேசிலியா, மே 30

பிரேசிலின் வடகிழக்கு பகுதிகளில் பெய்துவரும் கனமழை, வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவில் சிக்கி 35 பேர் உயிரிழந்தனர்.

தென்னமெரிக்க நாடான பிரேசிலில் கடந்த ஐந்து மாதங்களில் ஏற்பட்ட நான்காவது பெரிய வெள்ளப் பெருக்காக இது பதிவாகியுள்ளது.

வடகிழக்கு பெர்னம்புகோ மாகாணத்தில் மட்டும் அனர்த்தங்களில் சிக்கி 33 பேர் உயிரிழந்தனரென பிரேசில் அரசாங்கத்தின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இங்கு ஆயிரக்கணக்கானவர்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்துள்ளனர்.

பெர்னம்புகோவின் அண்டை மாகாணமான அலகோவாஸில் இரண்டு பேர் உயிரிழந்தனர் என்று பிரேசிலின் கூட்டாட்சி அவசர சேவை தகவல்கள் தெரிவித்துள்ளன. பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்கு மீட்பு படை துரித நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்று அந்த நாட்டின் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோ தெரிவித்துள்ளார். (ஐ)

## 22 பயணிகளுடன் பறந்த நேபாள விமானம் மாயம்!

காத்மண்ட், மே 30

நேபாளத்தின் பொக்காராவிலிருந்து ஜோம்சோமுக்கு நேற்று காலை 9.55 மணிக்கு புறப்பட்ட விமானம் மாயமானது. அந்த விமானம் விபத்துக்குள்ளானதா என்ற விவரம் நேற்று மாலை வரை உறுதி செய்யப்படவில்லை.

தாரா ஏர் நிறுவனத்தின் 9 யேநுவு விமானம், தலைநகர் காத்மாண்டில் இருந்து வடமேற்கே 200 கி. மீ, தொலைவில் உள்ள பொக்ராவிலிருந்து, வடமேற்கில் 80 கி. மீ. தொலைவில் உள்ள ஜோம்சோம் நகருக்கு காலை 9.55 மணியளவில் புறப்பட்டது.

விமானம் பறக்க ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே கட்டுபாட்டு அறை உடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தலகிரி என்ற மலைப்பகுதிக்கு சென்றபோது விமானம் கட்டுப்பாட்டு அறையில் இருந்து தகவல் தொடர்பை இழந்ததாக விமான நிலைய அதிகாரிகள் உறுதிப்படுத்தி உள்ளனர்.

காணாமல் போன விமானத்தில் மூன்று ஜப்பானியர்கள் இருந்தனரென உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மீதமுள்ளவர்கள் நேபாள குடிமக்கள் மற்றும் விமானத்தில் பணியாளர்கள் உள்பட 22 பயணிகள் இருந்தனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (ஐ)

## பனிப்பாறைகள் விழுந்து; மலையேறும் வீரர்கள் பலி!

ஜெனிவா, மே 30

சுவிட்சர்லாந்தில் மலை உச்சியில் இருந்து பனிப்பாறைகள் உருண்டு விழுந்ததில் மலையேறும் வீரர்கள் இருவர் உயிரிழந்தனர். மேலும் ஒன்பது பேர் காயமடைந்தனர்.

வாலாய்ஸ் கண்டன் பிராந்தியத்தில் வால் டி பாக்னெஸ் பகுதியில் உள்ள கிராண்ட் காம்பின் மலையில் இருந்து வெள்ளிக்கிழமை பல பனிப்பாறைகள் உருண்டு மலை ஏறுபவர்கள் மீது விழுந்தது.

சம்பவத்தை அடுத்து ஏழு மீட்பு ஹெலிகொப்டர்கள் சம்பவ இடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டன. பல்வேறு குழுக்களாக சம்பவ இடத்தில் இருந்த 17 மலையேறுபவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

உயிரிழந்த இருவரில் ஒருவர் 40 வயதான பிரான்ஸ் நாட்டவர் மற்றையவர் 65 வயதான ஸ்பானியர் என பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த ஒன்பது பேரில் இருவர் ஆபத்தான காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் பயணிகளுக்கு ஜப்பான் அனுமதி!



ரோக்கியோ, மே 30

ஜப்பானில் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா பரவல் காரணமாக, கடந்த இரண்டு ஆண்டுகளாக ஜப்பானில் பல்வேறு நாட்டு சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், உலகளவில் கொரோனாவின் தாக்கம் குறைந்துள்ளது. இதனால், உலக நாடுகள் இயல்பு நிலைக்கு திரும்பி வருகின்றன. பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

இந்த வகையில் ஜப்பானும் புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதன்படி, கொரோனா காரணமாக சுற்றுலா பயணிகளுக்கு இரண்டு ஆண்டுகளாக விதிக்கப்பட்டிருந்த தடையை ஜப்பான் நீக்கியுள்ளது.

இதுகுறித்து ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா கூறும்போது, “அடுத்த மாதம் 10ஆம் திகதி முதல் கொரோனா தடுப்பு வழிகாட்டப்பட்ட விதிமுறைகளின்படி சுற்றுலா பயணிகளின் அனுமதி வழங்குகிறோம். இதனைத் தொடர்ந்து நியூ சிட்டோஸ் விமான நிலையத்திலும், ஒகினாவாவில் உள்ள நஹா விமான நிலையத்திலும் சர்வதேச விமானங்கள் ஜூன் மாதம் முதல் தரையிறங்குவதற்கான ஏற்பாடுகள் தொடங்கும். படிப்படியாக சுற்றுலா பயணிகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது” என்று கூறினார்.

ஜப்பானுக்கு சுற்றுலா வருபவர்கள் இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும், பூஸ்டர் தடுப்பூசியையும் போட்டிருக்க போட்டிருக்க வேண்டும் என்று ஜப்பான் அரசு அறிவித்துள்ளது. (ஐ)

# பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் 4ஆவது சுற்றில் ஜொகோவிச்!



பாரிஸ், மே 30

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் முதல் நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜொகோவிச் 4-வது சுற்றுக்கு முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்துள்ள பிரெஞ்சு கிண்ண ரென்னிஸ் போட்டிகள் அண்மையில் ஆரம்பமாகின.

இதன் மூன்றாவது சுற்றில் முதல் நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜொகோவிச், 195ஆம் நிலை வீரரான சுலேவேனியாவின் அல்ஜாஸ் பெடேனை எதிர்த்து விளையாடினார். இதில், ஜொகோவிச் 6-3, 6-3, 6-2 என்ற நேர் செற்றில் வெற்றி பெற்று 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

15ஆம் நிலை வீரரான ஆர்ஜென்ரீனாவின் டியா கோஸ் வோர்ட்ஸ்மன் 6-3, 6-1, 6-2 என்ற நேர் செற்றில் 18ஆம் நிலை வீரரான பல்கேரியாவின் கிரிகோர் டிமிட்ரோவை தோற்கடித்து 4ஆவது சுற்றில் கால் பதித்தார்.

# இலங்கைக்கு எதிரான ரி- 20; தொடர் பாகிஸ்தான் வசம்!

கராச்சி, மே 30

விறுவிறுப்பையும் பரபரப்பையும் ஏற்படுத்திய இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மோதிய 3 ஆவதும் கடைசியுமான மகளிர் இருபது 20 கிரிக்கெட் போட்டியில் கடைசிப் பந்தில் 4 விக்கெட்களால் பாகிஸ்தான் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியுடன் 3 போட்டிகள் கொண்ட மகளிர் இருபது 20 கிரிக்கெட் தொடரை 3 - 0 என்ற ஆட்டங்கள் அடிப்படையில் பாகிஸ்தான் முழுமையாக கைப்பற்றியது.

கடைசி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 107 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

ஒரு கட்டத்தில் விக்கெட் இழப்பின்றி 69 ஓட்டங்களைப் பெற்றிருந்த இலங்கை, 34 பந்துகளில் 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 7 விக்கெட்களை இழந்து மோசமான நிலையை அடைந்தது. அத்துடன் 5 வீராங்கனைகள் அவசரப்பட்டு ரன் அவுட் ஆனது அதன் தோல்விக்கு காரணமாக அடைந்தது.

ஹாசினி பெரேரா (24), அணித் தலைவி சமரி அத்தப்பத்து (37) ஆகிய இருவரும் இந்தத் தொடரில் முதல் தடவையாக சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர். அவர்கள் இவரும் 11 ஓவர்களில் 69 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்ததால் இலங்கை அணி கணிசமான மொத்த ஓட்டங்களைப் பெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், 12ஆவது ஓவரின் முதல் 2 பந்துகளில் இருவரும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இலங்கையின்



சரிவும் ஆரம்பித்தது. தொடர்ந்து 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேலும் 5 விக்கெட்கள் சரிந்தன.

அனுஷிகா சஞ்சீவனி (14 ஆ.இ.), சுகந்தி குமாரி (10) ஆகிய இருவரும் 8ஆவது விக்கெட்டில் 24 ஓட்டங்களைப் பகிரந்து இலங்கை 100 ஓட்டங்களைக் கடப்பதற்கு உதவினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 108 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

பாகிஸ்தான் சார்பாக 6 துடுப்பாட்ட வீராங்கனைகள் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடி இரட்டை இலக்க எண்ணிக்கைகளைப் பெற்று தமது அணி வெற்றி பெற உதவினர்.

பாகிஸ்தான் முதல் 10 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 45 ஓட்டங்களை மாத்திரம் பெற்றிருந்ததால் இலங்கைக்கு வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு அதிகமாக இருந்தது. ஆனால், அதன் பின்னர் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் கடைசிப் பந்தில் வெற்றிபெற்று தொடரை முழுமையாகக் கைப்பற்றியது.

துடுப்பாட்டத்தில் முனீபா அலி (25), ஆலியா ரியாஸ் (17), அணித் தலைவி பிஸ்மா மஹ்ரூப் (15 ஆ.இ.), நிடா தார் (14) ஆகியோர் அதிகபட்ச பங்களிப்பை வழங்கினர்.

இலங்கை பந்துவீச்சில் ஓஷாதி ரணசிங்க 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் கவிஷா டில்ஹாரி 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.



# பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் ஸ்வியாரெக் முன்னேற்றம்!

பாரிஸ், மே 30

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸின் மகளிர் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்றுக்கு போலந்தின் ஸ்வியாடெக் முன்னேறினார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில், பிரெஞ்சு ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் போலந்தின் இகா ஸ்வியாரெக் மொன்டிநீக்ரோவின் டான்கா கோவினிக் மோதினர்.

இதில், அபாரமாக ஆடிய ஸ்வியாடெக் 6-3, 7-5 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, 4ஆவது சுற்றுக்குள் நுழைந்தார்.

மற்றொரு 3வது சுற்றுப் போட்டியில் அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா 6-1, 7-6 என, சுலோவேனியாவின் டமாரா ஜிடான்செக்கை வீழ்த்தினார். (ஐ)

# மகளிர் சவால் போட்டி; சுப்பர் நோவாஸ் சம்பியன்!

புனே, மே 30

மகளிர் இருபது - 20 சவால் போட்டியில் பரபரப்பான முறையில் 4 ஓட்டங்களால் வெற்றி பெற்ற சுப்பர் நோவாஸ் அணி, 3ஆவது தடவையாக சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

2018 முதல் 3 அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வந்த மகளிர் இருபது - 20 சவால் கிரிக்கெட் அடுத்த வருடத்திலிருந்து மகளிர் ஐ. பி. எல். என்ற புதிய பெயரில் 6 அணிகளின் பங்கேற்புடன் நடத்தப்படவுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சுப்பர் நோவாஸ் 20 ஓவர்களில் 165 ஓட்டங்களைக் குவித்தது. பிரியா பூனியா, டியேண்ட்ரா டொட்டின் ஆகிய இருவரும் நிதானம் கலந்த அதிரடி துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி 57 பந்துகளில் 73 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

பிரியா பூணியா 28 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது முதல் விக்கெட்டாக வீழ்ந்தார். இதனைத் தொடர்ந்து தன்னுடன் 2ஆவது விக்கெட்டில் இணைந்த அணித் தலைவி ஹர்மன்ப்ரீத் கோருடன் மேலும் 58 ஓட்டங்களை டொட்டின் பகிர்ந்தார்.

44 பந்துகளை எதிர்கொண்ட டொட்டின் 4 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 62 ஓட்டங்களைப் பெற்றார். ஹர்மன்ப்ரீத் கோர் 29 பந்துகளில் 3 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 43 ஓட்டங்களைப் பெற்றார். இந்த மூவரைவிட சுப்பர் நோவாஸ் துடுப்பாட்டத்தில் வேறு எவரும் இரட்டை இலக்க எண்ணிக்கையைப் பெறவில்லை.

வெலோசிற்றியின் பந்துவீச்சில் அணித் தலைவி தீப்தி ஷர்மா, கேட் குரூஸ், சிம்ரன் பஹதூர் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

166 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வெலோசிற்றி 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தது.

ஷெவாலி வர்மா (15), யஸ்டிகா பாட்டியா (13) ஆகிய இருவரும் சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுப்பர் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அவர்கள் இருவரும் முதல் 4 ஓவர்களுக்குள் ஆட்டமிழந்தனர்.

அவர்களைத் தொடர்ந்து மூவர் ஒற்றை இலக்கங்களுடன் ஆட்டமிழக்க 11 ஓவர்கள் நிறைவில் வெலோசிற்றி 5 விக்கெட்களை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றிந்தது.

லோரா வுல்வார்ட், ஸ்நேஹ் ராணா ஆகிய இருவரும் 6ஆவது விக்கெட்டில் 40 ஓட்டங்களைப் பகிர்ந்து அணிக்கு சிறு நம்பிக்கையை ஏற்படுத்தினர்.

ராணா 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அடுத்த பந்தில் ராதா யாதவும் களம் விட்டகன்றார்.

மொத்த எண்ணிக்கை 117 ஓட்டங்களாக இருந்த போது 7ஆவதாக கேட் குரூஸ் (13) ஆட்டமிழந்தார்.

இந் நிலையில் லோரா வுல்வார்ட், சிம்ரன் பாட்டியா ஆகிய இருவரும் துணிச்சலுடன் துடுப்பெடுத்தாடி சுப்ப ர்நோவாஸ/க்கு பெரும் சவால் விடுத்தனர்.

13 பந்துகளில் 31 ஓட்டங்களைப் பகிர்ந்த அவர்கள் 19ஆவது ஓவர் நிறைவில் மொத்த எண்ணிக்கையை 148 ஓட்டங்களாக உயர்த்தினர்.

கடைசி ஓவரில் வெற்றிக்கு மேலும் 17 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

எக்லஸ்டோனின் முதல் பந்தில் வுல்வார்ட் சிக்ஸர் ஒன்றை விளாசினார். ஆனால், அடுத்த 5 பந்துகளையும் கட்டுப்பாட்டுடன் வீசிய எக்லஸ்டோன் தமது அணி சம்பியனாவதை உறுதிசெய்தார்.

லோரா வுல்வார்ட் 40 பந்துகளை எதிர்கொண்டு 5 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக 65 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

சிம்ரன் பாட்டியா 10 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களைப் பெற்றதுடன் பிரிக்கப்படாத 9ஆவது விக்கெட்டில் வுல்வார்ட்டுடன் 44 ஓட்டங்களைப் பகிர்ந்தார்.

பந்துவீச்சில் அலனா கிங் 3 விக்கெட்களையும் சொவி எக்லஸ்டோன், டியேண்ட்ரா டொட்டின் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.



# காணாமல்போன குடும்ப பெண் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

மாத்தளை, மே 30

காணாமல்போன குடும்பப் பெண் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்டம், கலேவெலை பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயான ஆர். எம். பத்மலதா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த பெண் கடந்த வெள்ளிக்கிழமை இரவு முதல் காணாமல்போயுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் அருகில் உள்ள வீட்டுக்குச் செல்வதாகக் கூறி வீட்டை விட்டுச் சென்றிருந்தார் என்று உயிரிழந்த பெண்ணின் கணவர், பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

மறுநாள் காலை வரை மனைவி வீடு திரும்பவில்லை. இந்நிலையில், வீட்டுக்கு முன்னால் உள்ள பாதுகாப்பற்ற கிணற்றுக்கு அருகில் மனைவியின் காலணி இருப்பதைக் கண்டு, கிராம மக்களுடன் சேர்ந்து கிணற்றில் தேடினார் என்றும் கணவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கொலையா அல்லது தற்கொலையா அல்லது வேறு ஏதாவது காரணமா என்பது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# சிறுபோகத்துக்கு தேவையான உரம் கொள்வனவு செய்யப்படவில்லை!

## அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவிப்பு



**கொழும்பு, மே 30**

**சிறுபோக செய்கைக்கு தேவையான உரம் இதுவரை கொள்வனவு செய்யப்படவில்லை என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

எனவே, சிறுபோக செய்கைக்கு தேவையான உரத்தை விவசாயிகளுக்கு வழங்க முடியும் என்று தான் நம்பவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், சிறுபோக செய்கைக்கு தேவையான உரம் இதுவரை கொள்வனவு செய்யப்படவில்லை. சிறுபோக செய்கையில் அதிகபட்சமாக 50 சதவீத அறுவடையை எதிர்பார்க்கின்றோம். இந்த செய்கையில் கடின உழைப்புக்கு பல னில்லை.

எனவே, பெரும்போக செய்கையையாவது வெற்றிகொள்வதற்கான நடவடிக்கைகளை தற்போதிலிருந்து ஆரம்பிப்பதே சிறந்தது. உலகளாவிய ரீதியில் உணவு நெருக்கடி ஏற்படப்போவதாக பல்வேறுத் தரப்பினரும் கூறிவருவதால், ஏனைய நாடுகள் உர விநியோகத்தை நிறுத்தி வைத்துள்ளன - என்றார். (கே)

# பயறு செய்கையில் ஈடுபடும் 14,000 குடும்பங்களுக்கு உதவி

கொழும்பு, மே 30

பயறு செய்கையில் ஈடுபடும் 14,000 குடும்பங்களுக்கு தலா 18,000 ரூபாயை உதவித் தொகையாக வழங்குவதற்கு உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு இணங்கியுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவுக்கும் உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி விம்லெண்டா ஷரனுக்கும் இடையிலான சந்திப்பின்போதே இது குறித்து தீர்மானிக்கப்பட்டதாக விவசாய அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த சந்தப்பில், நாட்டின் விவசாயத்துறை எதிர்கொண்டுள்ள சவால்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன. துணை உணவு பயிர்ச் செய்கைகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு விவசாய அமைச்சர் தீர்மானித்துள்ள தாகவும் எனவே பயறு செய்கையை ஊக்குவிப்பதற்காக உணவு மற்றும் விவசாய ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர்விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க உலக உணவுத் திட்டம் இந்த உதவியை வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. (கே)

# ரயிலுடன் மோதுண்டு 6 வயது சிறுமி மரணம்!

கொழும்பு, மே 30

ரயிலுடன் மோதுண்டு 6 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் கம்பஹா - பியகம பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ரயில் கடவைக்கு அருகில் சென்று கொண்டிருந்த இரு சிறுமிகளில் ஒருவரே இவ்வாறு ரயிலுடன் மோதுண்டு மரணமானார்.

உயிரிழந்தவர் பியகம, ஹேகல்லை பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ஐ)

# 21ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பெரமுனவுக்குள் இருவேறு நிலைப்பாடு!

கொழும்பு, மே 30

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்குள் இரு வேறுபட்ட நிலைப்பாடு காணப்படுகிறது.

இரட்டை குடியுரிமையுடையவரின் அரசியல் பிரவேசத்துக்கு தடை விதித்தல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தல் உள்ளிட்ட திருத்த யோசனைகளுக்கு பொதுஜன பெரமுனவின் ஒரு தரப்பினர் ஆதரவு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பிறிதொரு தரப்பினர் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டமூல வரைபு தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், ஆளும் தரப்பின் உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு இன்று ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறவுள்ளதாக அறிய முடிகிறது.

நீதி மற்றும் அரசியலமைப்பு திருத்தம் மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச்சட்ட மூலவரைபில் உள்ளடக்கப்பட்டுள்ள திருத்த யோசனைகள் தொடர்பில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

21ஆவது திருத்தத்தின் ஊடாக இரட்டை குடியுரிமை கொண்ட நபர் அரசியல் செல்வாக்கு செலுத்துவதற்கு முழுமையாக தடை விதித்தல், நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் அதிகாரத்தை பிரதமருக்கு வழங்கல் உள்ளிட்ட யோசனைகளுக்கு பொதுஜன பெரமுனவின் ஒரு தரப்பினர் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ள நிலையில், பிறிதொரு தரப்பினர் ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளனர்.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், ஆளும் தரப்பு உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறவுள்ளதாக அறிய முடிகிறது.

இரட்டை குடியுரிமையுடையவர் பாராளுமன்றில் உறுப்பினராக பதவி வகிக்க தகுதியற்றவர் என அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டமூல வரைபின் 91 (1)(ஒ)ளை) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்த யோசனையை நீக்குமாறு பொதுஜன பெரமுனவின் பஸில் ஆதரவாளர்கள் அரசாங்கத்தின் உயர்மட்ட தரப்பினரிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கடவுச் சீட்டுகளைப் பெறுவதற்காக நாளாந்தம் 2500 பேர் விண்ணப்பம்

கொழும்பு, மே 30

நாட்டில், கடவுசீட்டைப் பெறுவதற்காக 2 ஆயிரத்து 500 பேர் வரை நாளாந்தம் முன்பதிவு செய்கின்றனர் என்று குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.


குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகம் ஒன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இதுவரையான காலங்களில் வழங்கப்பட்ட கடவுசீட்டுக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டால் தற்போதே அதிகமான கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படுகின்றன.

அத்துடன், அதிக எண்ணிக்கையிலானோர் கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு வருகின்றமையால் பத்தரமுல்லையில் நாளாந்தம் கடுமையான வாகன நெரிசல் ஏற்படுகின்றது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# சகல வழிகளிலும் இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து உதவும்!

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் உறுதி



புதுடில்லி, மே 30

நெருக்கடியான நேரத்தில் இலங்கைக்கு பக்கபலமாக நின்று அனைத்து வழிகளிலும், அதற்கு உதவுவது புதுடில்லியின் கடமை என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கு அத்தியாவசிய உதவி மற்றும் மருந்துப் பொருட்களை ஏற்றி வந்துள்ள இந்தியக் கடற்படையின் ஐ.என்.எஸ். காரியல் கப்பலின் மாலுமிகளுடன் நடத்திய மெய்நிகர் கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை, இந்தியாவின் அயல் நாடாக மாத்திரமன்றி, இந்தியாவின் பழைய நண்பனாகவும் உள்ளது. இந்தியா எப்பொழுதும் அண்டை நாடுகளுக்கு முதலிடம் என்ற கொள்கையைப் பின்பற்றுகிறது.

அத்துடன், இலங்கை, இந்தியாவின் மூலோபாய பங்காளியாகவும் நெருங்கிய கடல்சார் பங்காளியாகவும் உள்ளது. ஆகவே, நெருக்கடியான நேரத்தில் இலங்கையுடன் நின்று, அதற்கு சாத்தியமான எல்லா வழிகளிலும் உதவுவது இந்தியாவின் கடமையாகும்.

ஐ.என்.எஸ். காரியல் கப்பல் மற்றும் பிற இந்திய கடற்படைக் கப்பல்கள் நெருக்கடியான நேரத்தில் இலங்கைக்கு அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்வதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடல் நிலை பாதுகாப்பாக இருப்பதாக நான் நம்புகிறேன் - என்றார். (ஐ)

# 21ஐ எதிர்ப்பவர்கள் ஊர் திரும்ப முடியாது!

## ஓமல்பே சோபித தேரர்

கொழும்பு, மே 30

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கப்படாவிடின் மக்களிடம் இருந்து கடுமையான எதிர்வினைகள் ஏற்படும் என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற செயல்களைச் செய்து யாரும் சொந்த இடத்துக்கு செல்ல முடியும் என்று நம்பவில்லை என்றும் அவர் கூறினார்.

அரசியல் ஸ்திரத்தன்மையை அடைவதற்கு மோசடிக்கு வழிவகுத்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்க வேண்டும், அரசியலமைப்பின் 21வது திருத்தமே பிரதான தீர்வு எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## தேசிய சபையை...

முறைமையை ஒழிப்பதற்கான முயற்சியாகும். அதற்கான நேரம் மற்றும் வழிமுறைகள் கட்சித் தலைவர்களால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் பல வீனப்படுத்தப்பட்டதன் காரணமாக பாராளுமன்றத்தின் செயல்பாடுகள் முடங்கியுள்ளன. நிறைவேற்று அதிகாரத்துக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பொருளாதார நெருக்கடியை தடுக்கும் வகையில் பாராளுமன்றம் செயல்படவில்லை என்பதே இன்றைய பிரதான குற்றச்சாட்டு. பாராளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு பெரும்பான்மை இருந்தும் பாராளுமன்ற பணிகளை புறக்கணித்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அமைச்சரவை அமைச்சர்களால் அனைத்தும் திட்டமிட்டு கட்டுப்படுத்தப்பட்டது.

கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பதை நாம் எப்போதும் பார்க்க வேண்டியதில்லை. ஆனால், நாம் பின்பற்றக்கூடிய உதாரணங்கள் சில உள்ளன. இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர் 1931 முதல் 1947 வரை அரசியலமைப்பு சபை இருந்தது. அந்த சபையானது குழு முறையைப் பின்பற்றி செயல்பட்டது. ஒவ்வொரு விடயமும் ஏழு குழுக்களாக பிரிக்கப்பட்டன. குழுக்களின் தலைவர்கள் அமைச்சர்கள் ஆனார்கள். ஏழு அமைச்சர்கள் ஓர் அமைச்சரவையை அமைத்தனர். மேலும், ஆளுநரால் நியமிக்கப்பட்ட மூன்று அதிகாரிகள் இருந்தனர். மேலும், பொதுப் பணத்தைக் கட்டுப்படுத்த கணக்குக் குழுவும் இருந்தது. அந்த நேரத்தில் இந்த வழிமுறையை வெற்றிகரமாக செயல்படுத்த எங்களுக்கு வாய்ப்பு கிடைத்தது.

தற்போது, பாராளுமன்றத்தின் கட்டமைப்பை மாற்றி, தற்போதுள்ள பாராளுமன்ற முறை அல்லது வெஸ்ட்மினிஸ்டர் முறை மற்றும் அரசயலமைப்பு முறை ஆகியவற்றை இணைத்து புதிய அமைப்பை உருவாக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பாராளுமன்றம் நாட்டை ஆள்வதில் பங்கேற்கலாம்.

முதலாவதாக, நாணய அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் பாராளுமன்றத்திற்கு அந்த அதிகாரங்களை வழங்குவதற்கு தற்போதுள்ள சட்டங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும். ஐக்கிய இராச்சியம், நியூசிலாந்து மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் முன்மாதிரியைப் பின்பற்றி, நாங்கள் வலுவான மற்றும் சக்திவாய்ந்த சட்டத்தை முன்மொழிகிறோம்.

தற்போது அரசாங்க நிதி தொடர்பாக மூன்று குழுக்கள் உள்ளன. பொது நிதிக் குழு, கணக்குக் குழு மற்றும் பொது நிறுவனங்களுக்கான குழு ஆகிய மூன்று குழுக்கள் ஆகும். இந்த மூன்று குழுக்களின் அதிகாரங்களை பலப்படுத்துவதற்காக சபை தலைவர் தினேஷ் குணவர்த்தன பல யோசனைகளை முன்வைத்துள்ளார். மேலதிகமாக இதற்கு, நாங்களும் பரிந்துரைகளை முன்வைக்கிறோம். பண விவகாரங்கள் தொடர்பாக இரண்டு புதிய குழுக்களை அமைக்க நாங்கள் செயல்பட்டு வருகிறோம். இந்த விவகாரம் குறித்து ஆய்வு செய்ய சட்ட மற்றும் வழிமுறைக் குழுவை நியமிப்போம்.

இரண்டாவதாக, நாம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்னை வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் நிதி நிலை. பலவீனமான பிரச்னைகள் பல இதில் உள்ளன. எங்களின் நிலையியல் கட்டளை 111இன் கீழ் நாம் மேற்பார்வை குழுக்களை நியமிக்க முடியும். இதற்கு முன் கண்காணிப்புக் குழுக்கள் நியமிக்கப்படவில்லை. எனவே, பத்து மேற்பார்வைக் குழுக்களை நியமிக்க நாங்கள் முன்மொழிகிறோம். அதற்கு பாராளுமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த ஐந்து நிதிக் குழுக்கள் மற்றும் பத்து மேற்பார்வைக் குழுக்களின் தலைவர்கள் பின்வரிசை உறுப்பினர்களால் நியமிக்கப்படுகிறார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் அமைச்சர்களால் நியமிக்கப்படுவதில்லை. எனவே, அமைச்சர்கள் அமைச்சரவையில் இருந்து சுயாதீனமான மற்றும் அமைச்சர் மற்றும் பாராளுமன்றம் ஆகிய இருவருடனும் இணைந்து செயல்படும் ஒரு வழிமுறையை உருவாக்க எங்களுக்கு வாய்ப்பு உள்ளது.

தற்போதுள்ள அமைப்பை மாற்ற வேண்டும் என இளைஞர்கள் குரல் கொடுத்து வருகின்றனர். அவர்கள் தற்போதைய பிரச்னைகளையும் அறிய விரும்புகிறார்கள். எனவே, இந்த 15 குழுக்களுக்கும் தலா நான்கு இளைஞர் பிரதிநிதிகளை நியமிக்க நான் முன்மொழிகிறேன். அவர்களில் ஒருவர் இளைஞர் பாராளுமன்றத்தால் நியமிக்கப்படுவார். மற்ற மூவரும் போராட்டக் குழுக்கள் மற்றும் பிற ஆர்வலர் குழுக்களை சேர்ந்தவர்கள். இந்த நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிமுறையை இளைஞர் அமைப்புகளே தீர்மானிக்க முடியும்.

அத்துடன், குறிப்பிட்ட துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களை இந்தப் பணியில் ஈடுபடுத்தலாம் என்று நம்புகிறோம். இந்தப் பணியின் மூலம் இளைஞர்கள் தாங்களாகவே பிரச்னைகளை அறிந்து அதற்கான தீர்வுகளை வழங்க முடியும். அவர்கள் விரும்பினால் தேர்தலில் போட்டியிட முடியும். தேசிய சபையையும் நாங்கள் முன்மொழிகிறோம். சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் முக்கிய கட்சிகளின் தலைவர்கள் அடங்கிய குழு தேசிய சபை என்று அழைக்கப்படுகிறது.

தேசிய சபை மிகவும் முக்கியமானது என்றே கூற வேண்டும். நாட்டின் கொள்கைகள் குறித்து இதில் பேசலாம். அமைச்சரவையின் முடிவுகள் குறித்தும் பேசலாம். இந்நாட்டின் பாராளுமன்ற மறுசீரமைப்பு குறித்தும் பேசலாம். அப்படியானால், அதை அரசியல் அமைப்பு என்று சொல்லலாம். அமைச்சர்கள் மற்றும் குழுக்களின் தலைவர்களை அழைக்க தேசிய சபைக்கு உரிமை உண்டு.

நாம் முன்வைத்துள்ள புதிய முறைமையின்படி ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு பொறுப்புக்கூற வேண்டும். அமைச்சர்களின் அமைச்சரவையும் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும். தேசிய சபையும் பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டும். பதினைந்து குழுக்கள் மற்றும் மேற்பார்வை குழுக்கள் பாராளுமன்றத்துக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

அமைச்சரவை மூலம் அரசாங்கத்தை கட்டுப்படுத்தவும், ஜனாதிபதியின் பணிகளை ஆராயவும், தேசிய சபையின் மூலம் அரசியல் விவகாரங்களை மேற்பார்வையிடவும், மற்ற பதினைந்து குழுக்களின் நிதி விவகாரங்கள் மற்றும் பிற விஷயங்களை மேற்பார்வையிடவும் ஓர் அமைப்பு உள்ளது. வேறு பல அமைப்புகளும் இதே போன்ற திட்டங்களை முன்வைத்திருப்பதை நான் பாராட்டுகிறேன் - என்றார். (ஐ)

## அரசின் 21ஐ...

ரில் ராஜபக்ஷக்களை திருப்திப்படுத்துவதற்கு சதித் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. நிறைவேற்று அதிகாரத்தை இல்லாது ஒழிப்பதற்கான முதலடியை எடுத்து வைக்கவேண்டிய நிலையில், சில சந்தர்ப்பவாதிகள் ராஜபக்ஷக்களை பாதுகாக்க செயல்படுகின்றனர்.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ 21ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் ஜனாதிபதி தொடர்ந்தும் அமைச்சுப் பதவிகளை வகிக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தனிப்பட்ட பிரேரணையாகக் கொண்டு வரப்பட்ட 21ஆவது திருத்தச் சட்டத்தை நீர்த்துப் போக செய்ய சதிகள் இடம்பெறுகின்றன. இந்த முயற்சிகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். ராஜபக்ஷக்களை வீட்டுக்கு அனுப்புவதே நாட்டின் நோக்கமும் கோரிக்கையும். ஆனால், ராஜபக்ஷக்களை பாதுகாப்பதே லும்பத் கும்பலின் நோக்கம் - என்றும் சாடினார்.

# “பொய் கூறுகிறார் அமைச்சர் டக்ளஸ்”

யாழ்ப்பாணம், மே 30

பருத்தித்துறை சுப்பர்மடம் மீனவர்கள் தம்மிடம் மன்னிப்பு கோரினர் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது சமூகவலைத்தளத்தில் பொய் பதிவு இட்டுள்ளார் என்று அந்த மீனவர்கள் தெரிவித்தனர்.

வடமராட்சியிலுள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் பல சேர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவரின் அலுவலகத்தில் சந்தித்தனர்.

இதன்போது, மண்ணெண்ணெய் தட்டுப்பாடு தொடர்பில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னை தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் தனது முகநூலில் பதிவிட்டார்.

இதன்போது, சுப்பர்மடத்தில் மீனவர்கள் நடத்திய போராட்டம் தொடர்பில் மன்னிப்புக் கோரினர் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில், அது உண்மைக்கு புறம் பானது என்று சுப்பர் மடம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

## இளைஞன்...

யளவில் பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டியில் நடந்த இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் நாயன்மார்கட்டை சேர்ந்த ஆரியரட்ணம் திருக்குமார் (வயது 32) என்பவராவார். அவருடன் பின்னால் அமர்ந்து சென்ற 24 வயது நபர் படுகாயங்களுக்கு இலக்கான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

## காணாமல்...

ஆண்டு ஆரம்பித்தவருமான திருமதி மேரி பற்றிமா புஸ்பராணி என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

போரில் ஒரு மகனை இழந்த அவர், இறுதிப் போரின்போது காணாமல் ஆக்கப்பட்ட மற்றொரு மகனை தேடி வந்திருந்தார்.

வடமராட்சி கிழக்கு தாளையடியில் வசித்து வந்த அவருக்கு நேற்று அதிகாலை மாரடைப்பு ஏற்பட்டது. உறவினர்களால் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அங்கு அவர் மரணமானார். (ஐ)

## இருபது...

வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“பல நாடுகளில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் நடப்பது நெஞ்சை நெகிழ வைக்கின்றது. இருப்பினும், சமூக ஊடகங்கள் உள்ளிட்ட வெகுஜன ஊடகங்களில் இதுபோன்ற சம்பவங்கள் எவ்வாறு பதிவாகின்றன.

குற்றவியல் சட்டத்தின் 365 (சி) பிரிவு, வன்புணர்வுக்கு ஆளானவர்களின் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் படங்களை வெளியிடுவது தண்டனைக்குரிய குற்றமாகும் என்று தெளிவாகக் கூறுகின்றது.

சிறுவர் துஷ்பிரயோகம்ஃ கொலை தொடர்பான வழக்குகள் தொடர்பான ஊடக அறிக்கையை முறைப்படுத்த, சிறுவர்கள் நலனுக்கான மிகவும் சக்திவாய்ந்த நிறுவனமான என்.சி.பி.ஏவுக்கு நாங்கள் பலமுறை வேண்டுகோள் விடுத்துள்ளோம். எனினும், அர்த்தமுள்ள தீர்வுகள் எதுவும் வகுக்கப்படவில்லை மற்றும் 365(சி)ஐ மீறுபவர்களுக்கு எதிராக வழக்குகள் எதுவும் தொடங்கப்படவில்லை.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான துன்பகரமான வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுடன் கையாளும்போது என்.சி.பி.ஏ. அத்தகைய நீதிமன்ற உத்தரவைப் பெற முடியும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

இந்தத் துயரச் சம்பவத்தைப் பற்றிப் புகாரளிக்கும்போது அனைத்து ஊடகவியலாளர்களும் பொதுமக்களும் மிகுந்த உணர்வுடன் செயல்படுமாறும், பாதிக்கப்பட்டவரின் படங்களைக் காட்டுவதைத் தவிர்க்குமாறும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம், “இது என் பிள்ளையாக இருந்தால் என்ன?” என்று எப்போதும் உணர்ச்சியுடன் கேள்வி எழுப்புகின்றோம்.

இலங்கையின் அனைத்து சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் உறுதியான முயற்சிகளைத் தொடருவோம்” - என்றுள்ளது.

## யாழ்ப்பாணத்...

பொருட்கள் அண்மையில் நாட்டை வந்தடைந்தன.

இந்த உணவுப் பொருட்கள் தற்போது பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன. இதில், யாழ்ப்பாணத்துக்கு சுமார் 10 இலட்சம் கிலோ அரிசி கொண்ட 20 ஆயிரம் பொதிகள் கிடைத்துள்ளன. அத்துடன், 7,500 கிலோ எடை கொண்ட பால்மா பைக்கெற்றுக்களும் கிடைத்துள்ளன. இவை இன்றைய தினம் ரயில் மூலம் யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

இவை கிடைத்ததும், வறிய குடும்பங்கள் என்ற முன்னுரிமை அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மருத்துவ...

பொருளாதார நெருக்கடி மற்றும் சமூக ஸ்திரமின்மைக்கு தீர்வு காணுமாறு கோரி நேற்றைய தினம் விஹார மகா தேவி பூங்காவுக்கு அருகாமையில் இருந்து மருத்துவ பீட மாணவர்களின் போராட்டம் ஆரம்பமானது.

மருத்துவ பீட மாணவர்கள் நாட்டின் பல பல்கலைக்கழகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாதைகளை ஏந்தியவாறு மருதானை ரெக்னிக்கல் சந்தி வழியாக புறக்கோட்டையை நோக்கி பேரணியாகச் சென்றனர்.

இந்தப் பேரணி அங்கிருந்து ஜனாதிபதி மாளிகையை நோக்கிச் சென்ற நிலையில் கொழும்பு உலக வர்த்தக மையப்பகுதியில் வீதித்தடைகளை போட்டு பொலிஸார் அவர்களை திருப்பி அனுப்ப முயன்றனர்.

இதனால் அங்கு குழப்ப நிலை உருவாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள்மீது கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு குறித்த ஆர்ப்பாட்டம் கலைக்கப்பட்டது. இதனால் அந்தப் பகுதியில் பதற்ற நிலைமை நீடித்தது. (ஐ)

## ஆளுநரின்...

இதனை ஆதரிப்பது கடினமாகும். இந்நிலையில் 21இன் மூலம் 13ஆம் திருத்தத்தை - மாகாண சபை அதிகாரத்தை இல்லாது செய்ய வேண்டும் என்று தமிழ் மக்களை பாதிக்கின்ற கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

ஆனால், ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பது போன்று மாகாண ஆளுநரின் அதிகாரங்களும் குறைக்கப்பட வேண்டும். மக்களால் தெரிவு செய்யப்படும் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டு, ஆளுநர் பதவி சம்பிரதாயபூர்வமானதாக மாற்றப்பட வேண்டும்.

மேலும், கச்சதீவை இந்தியாவிடம் வழங்கினால் வடக்கு, கிழக்கு மீனவர்களின் நிலைமை இன்னும் மோசமடையும். இந்திய மீனவர்கள் தற்போது, மன்னார் கடற்கரை முதல் பருத்தித்துறை கடல் வரை அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள், மீன்வளங்களை அழிப்பதுடன் தொழில் வளங்களையும் அழிக்கிறார்கள். எனவே, கச்சதீவை இந்தியாவுக்கு கொடுப்பது சரியான நிலைப்பாடு அல்ல - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 - 08 - 1950



மறைவு 24 - 04 - 2022

### திருமதி கணேசலிங்கம் மனோரஞ்சிதம் *(சுசிலா)*

கோப்பாயைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா Catford ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கணேசலிங்கம் மனோரஞ்சிதம் அவர்கள் 24.04.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னத்துரை, சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரை, அன்னம் தம்பதிகளின் அன்பு மருமகளும், சின்னத்துரை கணேசலிங்கம் அவர்களின் பாச மிகு மனைவியும்,அரியநாயகம்(டென்மார்க்), காலஞ்சென்ற ஜெயமணி, சாரதாதேவி (இலங்கை), செல்வராசா (இலங்கை), சேகர் (இலங்கை), ரமேஸ்வரன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கிசோ (லண்டன்), றஷோ(கனடா), சுகிர்காந் (லண்டன்), சுரேஸ்காந் (இலங்கை), கவிதா(பிரான்ஸ்) ஆகியோரின் பாச மிகு தாயாரும், கிருசாந்தி (லண்டன்), கவிதா (கனடா), புஜிதா(லண்டன்), நிலானிகா (லண்டன்), வினோதரன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், துஷானிகா (லண்டன்), மதுரிகா (லண்டன்), மானுஷா (லண்டன்), றுதீஸ் (லண்டன்), கஸ்மினா (கனடா), கனிஷ்கா (கனடா), தகிஸ் (கனடா), மிஷான் (லண்டன்), நிகிஷா (லண்டன்), தஸ்வின் (லண்டன்), நன்சிகா(லண்டன்), சகிந்த் (லண்டன்), சகிஷா (லண்டன்), தனீஷா(பிரான்ஸ்), அக்ஷயன் (பிரான்ஸ்), கவிஷ்கா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேத்தியும், நாகேஸ்வரி (டென்மார்க்), அமுதமலர் (அவுஸ்திரேலியா), நாகராஜா (இலங்கை), இராசமலர் (இலங்கை), மஞ்சு (இலங்கை), கவிதா(இலங்கை), திரவியராஜா, யோகமலர் (டென்மார்க்), சண்முகநாதன், அருந்தவம், லோகநாதன், நிர்மலா, நன்னிதம்பி, ரூபாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

கிரியை
Monday, 30 May 2022 8:00 AM - 12:00 PM
Shaheed Udham Singh Asian Community Centre Ltd White Hart Rd, London SE18 1DG, United Kingdom

தகனம்
Monday, 30 May 2022 1:00 PM
Hither Green Crematorium Verdant Lane, London SE6 1TP, UK

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கிசோ - மகன்**

தொடர்புகளுக்கு:
**கிசோ - மகன்** Mobile : +447403650670
**றஷோ - மகன்** Mobile : +15144763432
**சுகிர் - மகன்** Mobile : +447963521273
**சுரேஸ் - மகன்** Mobile : +94776194517
**கவிதா - மகள்** Mobile : +33695455009

## நடேசன் நினைவேந்தல் மட்டக்களப்பில் நடந்தது!

*மட்டக்களப்பு, மே 30*

*மட்டக்களப்பில் வைத்து கடந்த 2004 ஆண்டு சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18ஆவது நினை வேந்தலும், "ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்" என்ற தொகுப்பு நூல் வெளியீடும் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.*

*கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் இ. தேவஅதிரன் தலைமையில் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.*

*இந்த நிகழ்வில், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரின் உருவப் படத்துக்கு வீரகேசரியின் முன்னாள் பிரதம ஆசிரியர் பீ. தேவராஜா மற்றும் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அருட்பணி நவரெட்ணம் நவாஜி அடிகளாரும் இணைந்து மலர் மாலை அணிவித்து, நினைவுச் சுடரேற்றப்பட்டதைத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு, மௌன அஞ்சலியும் இடம்பெற்றது.*

*இதனைத் தொடர்ந்து கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியமும், சிவராம் ஞாபகார்த்த மன்றமும் (சுவிஸ்) இணைந்து வெளியிட்ட "ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்" கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் இடம்பெற்றது.*

*கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஆலோசகரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான ஏ.எல்.எம்.சலீம் நூலை வெளியிட்டு வைத்தார்.*

*இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், இரா. சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன், முன்னால் மாகாண சபை உறுப்பினர்களான இந்திரகுமார் பிரசன்னா, நடராசா, ஊடகவியலாளர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)*

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 - 08 - 1961



மறைவு 26 - 05 - 2022

**விஸ்வப்பிரம்மஸ்ரீ சிற்பகலாசூரி**

### கணபதிப்பிள்ளை பழனித்துரை (ரவி)

திருநெல்வேலி கொடிலேனைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்து Alphen aan den Rijn ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பழனித்துரை அவர்கள் 26.05.2022 வியாழக்கிழமை அன்று நெதர்லாந்தில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சின்னம்மா தம்பதிகளின் இளைய புதல்வரும், காலஞ்சென்றவர்களான துரைராஜா பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காஞ்சனாதேவி (பேபி) அவர்களின் அன்புக் கணவரும்,கவிதாரணி அவர்களின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,முருகானந்தம், சிவரஞ்சன், அதிசயராஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரசாந் அவர்களின் பாசமிகு சித்தப்பாவும், V.T ராஜேந்திரா, நீலா, உமாதேவி, லங்காதேவி, சுரேந்திரன், நிரஞ்சனாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

**கிரியை**
Thursday, 02 Jun 2022 12:30 PM
Crematorium Alphen aan den Rijn Verlengde Aarkade 22, 2406 LB Alphen aan den Rijn, Netherlands


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**அனோஜன் - பெறாமகன்**

**காஞ்சனாதேவி - மனைவி**
Mobile : +31615149635
**அனோஜன் - பெறாமகன்**
Mobile : +491749619391

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 - 10 - 1928



மறைவு 26 - 05 - 2022

### இராயப்பு அந்தோனிமுத்து

(பொன்னுத்துரை)

B.A. ஓய்வு பெற்ற அதிபர் (தரம் 1)

யாழ். பத்தாவத்தை இந்தனையைப் பிறப்பிடமாகவும், தண்ணீரூற்று, முள்ளியவளை, கனடா Markham ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிமுத்து இராயப்பு அவர்கள் 26.05.2022 வியா ழக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான இராயப்பு செப நேசம்மா தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான பெர்ணாண்டோ மாகிறேற் தம்பதிகளின் மூத்த மருமகனும்,திரேசா தங்கராணி (அந்தோனி முத்து ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், ஜெசிந்தா(குஞ்சு), பிரான்சிஸ் தங்கராசா, றெஜிஸ் குண ராசா(குணம்), சார்ள்ஸ் ஜெயசீலன் (சீலன்), அன்ரனிஸ் ஜெயந்தராசா(ஜெயந்தன்) ஆகியோரின் அன்புத் தந்தை யும்,பிரான்சிஸ் சேவியர், சகுந்தலா, மார்செலா, கவிதா, சிந்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பஸ்தியாம்பிள்ளை(தம்புத்துரை), மனுவேற்பிள்ளை(முத்துத்துரை) மற்றும் மாகிறேற் (மணி) ஆகியோரின் மூத்த சகோதரரும்,றேசி, லைறிசி, டேவிஸ், சேளியா, அன்று, கிறிஸ்ரியா, அன்ரனி பிலிப், மேரி ஏஞ்ஜல், அலேஷா ஆகியோரின் அன்புத் தாத்தாவும்,சந்தியாப்பிள்ளை(தவம்), முத்திலம்மா(மணி), காலஞ்சென்ற ஞானசவுந்தரம்(தவம்), இராசகுமாரி, சாள்ஸ் பால கிருஷ்ணன், சாந்திகுமார், சதானந்தம், மறைந்த சந்திரபோஸ்(குலேந்திரன்), அமலதாஸ், ஞான ஆனந்தன்(பாபா), ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை அவர்களின் அன்புச் சகலனும்,ஆன் நிர்மலா அவர்களின் அன்புத் தொட்டப்பாவும்,அஞ்சலா தவமணி மற்றும் சஞ்ஜே ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிநிகழ்வுகள் நேரடியாக ஒளிபரப்பப்படும். அதற் கான இணைப்பு பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

**பார்வைக்கு**
Friday, 03 Jun 2022 5:00 PM - 9:00 PM
Saturday, 04 Jun 2022 7:00 AM - 8:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave> Markham, ON L3R 5G1, Canada

**திருப்பலி**
Saturday, 04 Jun 2022 9:45 AM
St. Thomas the Apostle Roman Catholic Church 14 Highgate Drive, Markham, ON L3R 3R6, Canada

**நல்லடக்கம்**
Saturday, 04 Jun 2022 11:45 AM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**செபநேசசெல்வி (செல்வி) - பெறாமகள்**

**சார்ள்ஸ் ஜெயசீலன்(சீலன்) - மகன்**
Mobile : +447956381508
**அன்ரனிஸ் ஜெயந்தராசா(ஜெயந்தன்) - மகன்**
Mobile : +14165536980
**செபநேசசெல்வி (செல்வி) - பெறாமகள்**
Mobile : +94770691031

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம்சார்பானநற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசிபலன்
7.05 மணி : உளவியல் கருத்து - உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழிஅறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி :சித்தமருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றையபத்திரிகைகளில்
8.30 மணி : காலைசெய்திகள்
9.00 மணி : கலாட்டாகாலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-சர்வம் தாளமயம்,சீடன்
4.30 மணி :குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலைநிகழ்ச்சி
5.30 மணி :குறுந்திரைநேரம்
6.00 மணி :ரெயிலர்ரைம்
06.30 மணி :நலந்தானா - பொது வைத்திய நிபுணர் - பேரானந்தராஜா



**இரவு**

07.00 மணி :சொற்சமர் - பாடசாலை மாணவர்களுக்கான விவாதநிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி :சாட்சியம்




09.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி :நேருக்குநேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு